# மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2026 அக்டோபர் 1-15 தொகுதி 25 இதழ் 5

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200




## தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கம் செய்!

# இந்தியன் எக்ஸ்பிரஸ் புலனாய்வும் தேர்தல் ஆணையத்தின் எதிர்வினையும்

## தேர்தல் ஆணையத்தின் நடுநிலைமை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வை உறுதிப்படுத்தும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் வேண்டும் – சிபிஐ(எம்எல்) கோரிக்கை






செப்டம்பர் 23, 2026

தேர்தல் ஆணையத்தின் உள்ளே நிலவும் தீவிரமான கருத்து வேறுபாடுகள், தலைமைத் தேர்தல் ஆணையரின் தன்னிச்சையான செயல்பாடுகள் குறித்த, பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய, இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழின் (23.9.2026) புலனாய்வு அறிக்கையை, இந்தியத் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்தி உறுதிப்படுத்துகிறது. சிபிஐ(எம்எல்) கட்சி உள்பட பலரும் தொடர்ந்து எழுப்பிய எதிர்ப்புகளை தற்போது தேர்தல் ஆணையர்கள் எழுப்பியுள்ள பிரச்சினைகள் உறுதிப்படுத்துகின்றன. இதனைத் தேர்தல் ஆணையத்தின் உள் விவாதங்களின் ஒரு பகுதி சித்திரம் மட்டுமே என்றும் ஒரு சாதாரண அம்சம் என்றும் கூறி திசைதிருப்ப முயலும் தேர்தல் ஆணையத்தின் முயற்சி, நியாயப்படுத்த முடியாத ஒன்றை நியாயப்படுத்த முயற்சிக்கும் படுமோசமான மூடிமறைப்பு முயற்சியாகும்.

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த (எஸ்ஐஆர்) செயல்முறை குறித்த பல்வேறு பொதுத் தணிக்கைகள், ஆய்வுகளில் கண்டறியப்பட்ட முறைகேடுகளையே இந்தியன் எக்ஸ்பிரஸ் அறிக்கை உறுதிப்படுத்துகிறது. குறைபாடுகள் நிறைந்த இந்த எஸ்ஐஆர் செயல்முறையால் ஏற்கனவே இலட்சக்கணக்கான வாக்காளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டு, பெரும் துன்புறுதலுக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர். முறைகேடு செய்யப்பட்ட, நம்பகத்தன்மை இழந்த வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் நடத்தப்படும் எந்தவொரு தேர்தலும் தேர்தல் ஆணையத்தின் வெற்றி எனச் சொல்லப்படுவதற்கு சான்றாக முடியாது.

இந்தியன் எக்ஸ்பிரஸ் புலனாய்வு அறிக்கையின் வெளிச்சத்தில், அது தேர்தல் ஆணையத்தாலேயே இப்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், சிபிஐ(எம்எல்) லிபரேஷன் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து கடிதம் எழுதியிருக்கிறது.

1. ஞானேஷ் குமார் மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி, உடனடியாக அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

2. எஸ்ஐஆர் செயல்முறையை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டும்.

3. தவறாக நீக்கப்பட்ட ஒவ்வொரு வாக்காளரின் வாக்குரிமையையும் திரும்ப வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. எஸ்ஐஆர் தொடங்கப்பட்டதிலிருந்து நடத்தப்பட்ட பீகார், மகராஷ்ட்ரா, மேற்கு வங்கம், டெல்லி, ஹரியானா போன்ற மாநில தேர்தல்களை ரத்து செய்துவிட்டு, சம்பந்தப்பட்ட மாநிலங்களில் மீண்டும் புதிய தேர்தல்களை நடத்த உத்தரவிட வேண்டும்.

5. தேர்தல் ஆணையர்களை நியமிப்பது தொடர்பான உச்ச நீதிமன்ற தீர்ப்பின் உணர்வுக்கு இணங்க, தேர்தல் ஆணையத்தின் நடுநிலைமை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வை உறுதிப்படுத்தும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்.

**மத்திய குழு;**
**சிபிஐ(எம்எல்) விடுதலை**

மாலெ தீப்பொறி

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**(மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்)**

தமிழ்நாடு மாநிலக் குழுவின்
அரசியல் ஏடு

இருவார இதழ்
*2026 அக்டோபர் 1-15*
தொகுதி 25 இதழ் 4

முதன்மை ஆசிரியர்
சங்கர்.வீ

ஆசிரியர்
ஜி.ரமேஷ்

ஆசிரியர் குழு
பழ.ஆசைத்தம்பி
பாலசுந்தரம்
அ.சந்திரமோகன்
கே.ஜி.தேசிகன்

மேலாளர்
சொ. இரணியப்பன்

அட்டை வடிவமைப்பு
பாட்டாளி

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர் சென்னை - 600048
தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

# தவெக ஆட்சியின் சாயம் வெளுக்கிறதா?

தவெக அரசு பதவியேற்று நான்கு மாதங்களுக்குள் 12 அரசாரணைகளை வெளியிட்டு, எதிர்ப்பின் காரணமாக இரண்டொரு நாள்களிலேயே அவற்றைத் திரும்பப் பெற்றும் உள்ளது. திரும்பப் பெற்றது நல்லதுதான். ஆனால், அப்படி முதலில் வரும் உத்தரவுகளுக்கான காரணம் என்ன?. முதலில் விஜய்யின் ஆஸ்தான சோதிடர் ரத்தன் பண்டிட் வெற்றிவேலை தமிழ்நாடு அரசின் செலவில் தன்னுடைய தனி ஆலோசகராக நியமித்ததில் ஆரம்பமானது. வரிசையாக வந்து இப்போது சட்டம் ஒழுங்குப் பிரச்சனைகள் தொடர்பாக தகவல் அறியும் சட்டத்தின் மூலம் தகவல்கள் தர வேண்டியதில்லை என அரசாணை வெளியிட்டது. கடும் எதிர்ப்பின் காரணமாக செப்டம்பர் 29ம் தேதியே அதை திரும்பப் பெற்றது. இது ஏதோ தவெக அரசால் தவறுதலாக தெரியாமல், புரியாமல் வெளியிடப்பட்டு, சுட்டிக் காட்டிய பின்னர் திரும்பப் பெறப்பட்டுவிட்டது என்று எடுத்துக் கொள்ள முடியுமா என கேள்வி எழுகிறது. வட்டாட்சியர் ஒருவர், இடதுசாரி கட்சி உறுப்பினர்களைக் கணக்கெடுக்கச் சொல்லி உத்தரவு போட்டார். எதிர்ப்பு கிளம்பியவுடன் அது வட்டாட்சியரே தன்னிச்சையாகப் போட்ட உத்தரவு, அதற்கும் அரசிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லப்பட்டது. அடுத்து நீட் தேர்வுக்கு எதிரான டெல்லி ஜந்தர் மந்தர் போராட்டத்தைத் தொடர்ந்து, அகில இந்திய மாணவர் கழகத்தின் தேசியத் தலைவர் நேகா, தமிழ்நாடு வந்த சமயத்தில், (அப்போது அமித்ஷாவும் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தார்) கல்லூரி மாணவர்கள் யாரும் இடதுசாரி அமைப்புகளின் கூட்டங்களுக்கோ, கரப்பான்பூச்சி கட்சியின் கூட்டங்களுக்கோ போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கல்லூரிக் கல்வித் துறையால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. கடுமையான எதிர்ப்பைச் சந்தித்தவுடன் முதல்வருக்கு இது தெரியாது என்று சட்டப் பேரவையில் சப்பைக்கட்டு கட்டினார் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உயர் கல்வித்துறை அமைச்சர். இந்த இரண்டு உத்தரவுகளும் மிகத் தெளிவாக இடதுசாரிக் கட்சிகளைக் குறி வைத்துதான் வெளியிடப்பட்டன என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அப்போதே இதற்குப் பின்னணியில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சாய்க்குமார் இருப்பதாகவும், அவர் ஆர்எஸ்எஸ் சார்பு கொண்டவர், அவரின் செயல்பாடுகள் ஒன்றிய பாஜக அரசின் கொள்கைகளை ஒத்திருக்கிறது அதனால், அவர் மாற்றப்பட வேண்டும் என்றும் கோரிக்கைகள் வந்தன. இப்போது வந்த அரசாணை மிகவும் ஆபத்தானது. காவல்துறையின் காட்டாட்சிக்கு வழிவகுக்கக் கூடியது, தவெக ஆட்சிக்கு வந்தபின்னர், நாட்டில் பாலியல் குற்றங்கள், ஆணவக் கொலைகள், சாதியாதிக்கக் கொலைகள், போதை விற்பனை, அதனால் கொலைகள் என நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, நடக்கும் குற்றங்களை மூடி மறைப்பதற்கான முயற்சிதான் மேற்கொள்ளப்படுகிறது. தவெகவின் இந்த நான்கு மாத ஆட்சியில், 500க்கும் மேற்பட்ட கொலைகள் என புள்ளி விவரங்கள் சொல்கின்றன. தவெகவினர் பல குற்றவாளிகளை காப்பாற்றுவது மட்டுமின்றி. பல வழக்குகளில் அவர்களே குற்றவாளிகளாக உள்ளனர் எனச் செய்திகள் வருகின்றன.

காவல்துறையின் அத்துமீறல்கள் அன்றாட நிகழ்வுகள் ஆகிவிட்டன. விவசாயிகள், தொழிலாளர்கள் போராட்டமாக இருந்தாலும் சரி, மாணவர், இளைஞர் போராட்டமாக இருந்தாலும் சரி, டாஸ்மாக்கிற்கு எதிரான போராட்டமாக இருந்தாலும் சரி, சுற்றுப்புறச் சூழலுக்கு எதிரான போராட்டமாக இருந்தாலும் சரி, நீட் எதிர்ப்புப் போராட்டமாக இருந்தாலும் சரி காவல்துறையினர் ஒடுக்குமுறையைக் கையாள்கின்றனர். பள்ளிக் கூடங்கள், கல்லூரிகளுக்குள்ளேயே சென்று மாணவர்களைக் கைது செய்கிறார்கள். சமீபத்தில் திருநெல்வேலி கங்கை கொண்டானில், சிப்காட்டிலுள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் இருந்து துர்நாற்றம் வீசுகிறது என்பதற்காக, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுப்பதற்கு மக்கள் அங்கிருந்து புறப்பட்ட போது,

தொடர்ச்சி 5 ம் பக்கம்...

# ஆயிரம் ஜந்தர் மந்தர்கள் மலரட்டும்!

செப்டம்பர் 25 அன்று ஜந்தர் மந்தரில் அமைதியான மக்கள் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்திய தேர்தல் அமைப்பின் அரசமைப்புச்சட்ட அடித்தளமான, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டில் உள்ள கடுமையான முறைகேடுகளை அம்பலப்படுத்திய, 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழின் அதிரடியான புலனாய்வு அறிக்கைதான் இந்தப் போராட்ட அழைப்பிற்கான பின்னணி. தேர்தல் ஆணையத்தின் தலைமை அலுவலகத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் தில்லி, தற்போது அதிர்ச்சியளிக்கும் எஸ்.ஐ.ஆர் நடவடிக்கையையும் எதிர்கொண்டு வருகிறது. தில்லியில் உள்ள ஒவ்வொரு இரண்டு பேரில் ஒருவர், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் அல்லது 'தர்க்கரீதியான குறைபாடு' என்ற குற்றச்சாட்டுகளைத் தீர்க்க உரிய ஆதாரங்களை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

இச்சூழலில், ஜந்தர் மந்தரில் மக்கள் போராட்டத்திற்கான அழைப்பு மிகவும் இயல்பானதே. ஆனால் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தில்லி காவல்துறை வேறுவிதமாக எண்ணியது. ஜந்தர் மந்தருக்குச் செல்லும் ஒவ்வொரு சாலையையும் தெருக்களையும் காவல்துறை தடுப்புகளை அமைத்து தடுத்தது. முழுப் பகுதியும் சுற்றி வளைக்கப்பட்டது. ஆர்.ஏ.எஃப் (அதிரடிப்படை), பி.எஸ்.எஃப் (எல்லைக் காவல் படை), ஐ.டி.பி.பி (இந்தோ திபேத்தியன் எல்லைக் காவல்படை) ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த வீரர்களும் ஈடுபடுத்தப்பட்டு, பாதுகாப்புப் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டனர். அவர்களுள் பலரிடம் பேட்ஜ்களோ, பெயர்ப் பட்டைகளோ இல்லை. போராட்டக்காரர்களை ஜந்தர் மந்தருக்குள் நுழைய விடாமல் தடுத்ததோடு காவல்துறை நின்றுவிடவில்லை; ஜந்தர் மந்தர் அருகே இருந்த போராட்டக்காரர்களைப் பிடித்து, இழுத்துச் சென்று பேருந்துகளில் அடைத்து, தில்லி எல்லையோர காவல் நிலையங்களுக்குக் கொண்டு சென்று பல மணிநேரம் சிறைவைத்தனர்.

இவ்வாறு தில்லியின் நன்கறியப்பட்ட போராட்டக் களம் காவல் முகாமாக மாற்றப்பட்டு வருகிறது; அத்துடன் அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் அடிப்படை அரசமைப்புச் சட்ட உரிமை பலவந்தமாக மறுக்கப்படுகிறது. உண்மையில், பாசிசம் என்பது மக்களைக் கட்டுப்படுத்துவதும், ஒரு கடும் ஒடுக்குதலுக்கு ஆளான ஒரு சமூகத்தை உருவாக்குவதுமாகும். முழுமையான கட்டுப்பாடுகளும், அடக்குமுறைகளும் கொண்ட ஆட்சியைச் செயல்படுத்த, மோடி–ஷா அரசு, இந்தியாவை ஒரு அச்சம் நிறைந்த குடியரசாக, விலங்கிடப்பட்ட ஒரு குடியரசாக திட்டமிட்டு மாற்றி வருகிறது. "அச்சமற்ற மனதையும், நிமிர்ந்த தலையையும்" கொண்ட ஒரு சுதந்திரக் குடியரசைத் தாகூர் கற்பனை செய்திருந்தார்; ஆனால் பயங்கரவாத பாசிச ஆட்சியின் ஆதரவாளர்களுக்கோ அது முற்றிலும் வெறுக்கத்தக்கதாகும்.

மக்கள் போராட்டங்கள் மற்றும் இயக்கங்கள் என்ற எண்ணத்திற்கே இந்த அரசாங்கம் எதிராக உள்ளது. மக்களின் போராட்டங்களையும், ஒரு சுதந்திர குடிமகன் தனது அறிவையும் மனசாட்சியையும் பயன்படுத்தி எப்போதும் விழிப்புடன் இருந்து தனது சுதந்திரத்தைப் பாதுகாக்கும் எண்ணத்தையும் கேலி செய்யும் வகையில் 'ஆந்தோலன்ஜீவி', 'திமாகி நக்சல்' போன்ற முத்திரைகளை குத்துகிறது. காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற நீண்ட நெடிய போராட்டத்தை நடத்த வேண்டியிருந்த ஒரு நாட்டில், 'ஆசாதி' (சுதந்திரம்) என்ற முழக்கத்தைப் பயன்படுத்துவதையே இந்தப் பாசிச ஆட்சி குற்றமயமாக்குகிறது; குடிமக்கள் அடிமைகளாக நடந்துகொள்ள வேண்டும் என்றும், அடிமைத்தனத்தைக் கொண்டாட வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறது போலும்.

விவாதங்கள் மற்றும் மாற்றுக் கருத்துகளுக்கான வெளி, திட்டமிட்டுச் சுருக்கப்பட்டு வருகிறது. 'ஒதுக்கப்பட்ட போராட்ட இடங்களிலும்', வீதிகளிலும், மட்டுமல்ல, பல்கலைக்கழக வளாகங்களிலும், ஊடகங்களிலும் மட்டுமல்ல, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சட்டங்களை இயற்ற வேண்டிய, ஜனநாயக ஆட்சி முறை காத்திட, மக்கள் நலன் சார் கொள்கைகள் வகுத்திட வேண்டிய சட்டமன்ற, நாடாளுமன்ற அரங்குகளிலும் கூட, விவாதங்கள் மற்றும் மாற்றுக் கருத்துகளுக்கான வெளி திட்டமிட்டுச் சுருக்கப்பட்டு வருகிறது. பாரபட்சமான குடியுரிமைச் சட்டத் திருத்தங்களுக்கு எதிராக அமைதியான போராட்டங்களை ஒருங்கிணைத்ததற்காகவோ அல்லது தொழிலாளர்களுக்கான சட்டபூர்வமான குறைந்தபட்ச ஊதியத்தைக் கோரியதற்காகவோ சமூகச் செயற்பாட்டாளர்கள் பல மாதங்களாகவும் ஆண்டுக் கணக்கிலும் சிறையில் வாடுகின்றனர்.

இப்போது, போராட்டங்களை ஒடுக்கிட, அரச அடக்குமுறைக் கருவிகளை மட்டுமே சார்ந்திருக்கவில்லை இந்த அரசு; சட்டவிரோத வன்முறைக் கும்பல்களின் வன்முறை வெறியாட்டத்தை பயன்படுத்துவது போன்ற பல்வேறு வகையான சட்டத்திற்குப் புறம்பான வழிமுறைகளை தொடர்ந்து பயன்படுத்தி வருகிறது. தில்லியில் சிஏஏ (குடியுரிமை திருத்தச் சட்டம்) எதிர்ப்புப் போராட்டங்களை ஒடுக்க, போலீஸ் அடக்குமுறையையும், மதவெறிவாத வன்முறையையும் சேர்த்தே இந்த அரசு எப்படி கட்டவிழ்த்து விட்டது என்பதை நாம் பார்த்திருக்கிறோம். மிகச் சமீபத்தில், நொய்டாவில் தொழிலாளர்களின் போராட்டங்களும் கூட வன்முறையைத் தூண்டி, நசுக்கப்பட்டன.

ஆனால் இதே பாணியிலான திட்டம், நமது காலத்தில் நிகழ்ந்த மற்ற இரு சக்திவாய்ந்த போராட்டங்களில் பலிக்கவில்லை – ஒன்று, தில்லி எல்லையில் கூடாரங்கள் அமைத்து ஓராண்டு காலம் நடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விவசாயிகள் போராட்டம்; மற்றொன்று, ஜந்தர் மந்தரில் நிகழ்ந்த இளைஞர்களின் எழுச்சி (ஐந்து வார கால உள்ளிருப்புப் போராட்டம், இருபத்து மூன்று நாள் உண்ணாவிரதம், மற்றும் பல்லாயிரக்கணக்கான அமைதியான, நிராயுதபாணியான இளைஞர்கள் மற்றும் பெண்கள் நடத்திய நாடாளுமன்றம் நோக்கிய பேரணி அரசாங்கத்தை மண்டியிட வைத்தது).

ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடந்த ஜந்தர் மந்தர் போராட்டங்களின் செய்தி, நாடு முழுவதும் எதிரொலித்து வருகிறது; பலதரப்பட்ட மக்கள் தங்களின் எதிர்ப்புக் குரலை எழுப்புவதற்கு உத்வேகம் பெற்றுள்ளனர். பல ஆண்டுகளாக புறக்கணிப்புக்கு உள்ளான அரசுப் பள்ளிகளில், செயலூக்கமான ஒரு கல்வி முறை வேண்டும் என்று வலியுறுத்துவதன் மூலம், வருங்காலத்தின் கேள்வி கேட்கும் குடிமக்களாக ஜென் ஆல்பா () மாணவர்கள் உத்வேகமூட்டும் முன்மாதிரிகளாக உருவாகி வருகின்றனர்.

கடந்த எண்பதாண்டு கால இந்திய ஜனநாயகத்தை உயிர்ப்புடன் வைத்திருக்கும் அதே தேர்தல் முறையை, மோசடியாக கைப்பற்றுவதன் மூலம், மக்கள் போராட்டங்கள், கேள்வி கேட்கும் குடிமக்களிடமிருந்து தன்னை நிரந்தரமாகப் பாதுகாத்துக் கொள்ள, ஆட்டம் கண்டுள்ள மத்திய அரசு இப்போது முயற்சிக்கிறது. தேர்தல் ஆணையத்தைத் தேர்ந்தெடுப்பதில் ஆளும் அரசாங்கத்திற்கு முழுச் சுதந்திரத்தை வழங்கியதோடு, தேர்தல் ஆணையர்களுக்கு வாழ்நாள் முழுவதுமான சட்ட விலக்கு அளித்த 2023 ஆம் ஆண்டின் தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டத்திலிருந்துதான் இந்தச் சீரழிவு தொடங்கியது.

அதைத் தொடர்ந்து எஸ்.ஐ.ஆர் வந்தது; முறைகேடுகளுக்கான ஆதாரங்கள் பெருகிய போதிலும் உச்ச நீதிமன்றம் தலையிட மறுத்தது. இந்தச் சீரழிவைத் தேர்தல் ஆணையம் தொடர அனுமதித்தது. இப்போது நாம், நடுநிலைமை, வெளிப்படைத்தன்மை, பொறுப்பேற்றல் ஆகியவற்றின் சாயல் துளி கூட இல்லாத, இயல்பாகவே முறைகேடாகச் செயல்படக்கூடிய ஒரு தேர்தல் ஆணையத்தை, எண்ணற்றோரின் வாக்குரிமை பறிப்பை, பல அடுக்குகளிலான தேர்தல் மோசடிகளை கொண்ட ஒரு அதிர்ச்சியான யதார்த்தத்தை எதிர்கொண்டுள்ளோம்.

வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை மற்றும் சுதந்திரமான, நியாயமான தேர்தல் என்ற வாக்குறுதியே இப்போது பெரும் ஆபத்தில் சிக்கியுள்ளது. அரசாங்கமே தனது வாக்காளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும், மக்களின் கோபத்தை அலட்சியப்படுத்திடவும், தேர்தலில் தோற்றுவிடுவோம் என்கிற அச்சம் எதுவுமின்றி, பாதுகாப்பாக, அதிகாரத்தில் அமர்ந்திருக்க அரசுகள் அனுமதிக்கப்பட்டால், ஜனநாயகம் அதன் முழு அர்த்தத்தையும் இழந்துவிடும்.

இப்படி முழுமுற்றாக வலுப்பெற்றுள்ள பாசிசம் என்ற பூதத்தை வீழ்த்த இந்தியா எவ்வாறு தனது எதிர்ப்புக் குரலை எழுப்பப் போகிறது? இந்தக் கேள்வி, காலனித்துவ இந்தியாவில் நமது முன்னோர்கள் எதிர்கொண்ட சவாலுக்கு ஒப்பானதாகும். அவர்கள் அந்தச் சூழலுக்கு எதிராக வீறுகொண்டு எழுந்து அந்தச் சவாலை முறியடித்ததைப் போலவே, இன்றைய இந்தியாவின் மக்களாகிய நாமும் முன்னோக்கிச் செல்வதற்கான வழியைக் கண்டறிய வேண்டும்.

அபரிமிதமான துணிவு, மக்களின் உறுதி, ஒற்றுமை ஆகியவற்றால் அடையாளப்படுத்தப்படும் இன்னும் பல போராட்டங்கள் வளர்ந்து தழைக்கட்டும். ஆயிரம் ஜந்தர் மந்தர்கள் தோன்றட்டும். ❑

**தலையங்கம் தொடர்ச்சி...**

அப் பகுதி காவல் ஆய்வாளர், மனு கொடுக்கப் போகக் கூடாது என்று தடுத்து நிறுத்த, தள்ளுமுள்ளு ஏற்பட்ட நிலையில், பொதுமக்களில் ஒருவரை காவல் ஆய்வாளர் ஓங்கி அடிக்கிறார். சுற்றுச் சூழலைக் கெடுக்கும் ஆலையை எதிர்த்து மனு கொடுக்கக் கூட செல்லக் கூடாது என்று காவல்துறை தடுக்கிறது. மனு கொடுக்கச் செல்லவே தடை செய்யும் தவெக அரசின் காவல்துறை, போராட்டங்களுக்கு எப்படி அனுமதி கொடுக்கும்.

கடந்த திமுக ஆட்சியின் போதே, காக்கி உடைக்குள் காவி ஒளிந்து கொண்டுள்ளது என்ற விமர்சனங்கள் வந்தன. தகவல் தருவது எங்கு மறுக்கப்படுகிறதோ, அங்கு ஊழல் துவங்கிவிட்டது என்பதே பொருள். தகவல் உரிமைச் சட்டம்தான் அரசு நிர்வாகத்தின் பல ஊழல்களை வெளிக் கொண்டு வந்துள்ளது. இந்த ஆணையும் எதிர்ப்பின் காரணமாக வழக்கம்போல் திரும்பப் பெற்று விட்டாலும், தவெக அரசு இதை திரும்பக் கொண்டு வருமா எனத் தெரியவில்லை. ஏனென்றால், ஒன்றிய பாஜக அரசின் பல்வேறு திட்டங்களை, கொள்கைகளை, தெரிந்தோ தெரியாமலோ, தவெக அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டு வருவது போல தெரிகிறது. பாஜகவைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசத் தயங்குகிறார் விஜய். சட்டமன்றத்தில் பாஜக பற்றி யார் பேசினாலும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. தன்னுடைய தாயாரைப் பற்றி தவறாகப் பேசியது பாஜக தலைவர் என்ற போதிலும், அந்தப் பழியையும் திமுகவின் மீதே போடுகிறார்.

மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி என்று தன்னுடைய கூட்டணிக்கு பெயர் வைத்த மறுநாளே, தவெக அமைச்சர்கள் பலரும் கலவர ஊர்வலமான இந்து முன்னணியின் விநாயகர் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். உலக சுற்றுலா நாள் ஆன செப்.27 அன்று இராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடியில், தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறையின் சார்பாக, "ராம் யாத்ரா" என்ற பெயரில் அபிநய நாட்டியாஞ்சலி எனும் குழுவினருடன் சேர்ந்து நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் நூற்றுக்கணக்கான பள்ளிக் குழந்தைகளை காவி உடையில் நடனமாடச் செய்துள்ளார்கள். அதோடு மட்டுமின்றி, அந்தக் குழந்தைகளை பல மணி நேரம் நிற்க வைத்திருக்கிறார்கள். இது ஒரு புறம் மனித உரிமை மீறல். மறுபுறம், இதுதான் மதச் சார்பற்ற அரசா என்ற கேள்வியை எழுப்புகிறது. அதனால்தான் தமிழ்நாடு முதல்வர், தவெக தலைவர் தாராபுரம் தேர்தல் பிரச்சாரத்தின் போது, எம் மதமும் சம்மதம் என்று பேசியுள்ளாரோ? எம்மதமும் சம்மதம் என்பதற்குத் தவறான முன்மாதிரியாக அல்லவா இவை இருக்கின்றன.

முற்போக்கு விழுமியங்களுக்குப் பெயர் பெற்ற தமிழ்நாட்டில், பிற்போக்கு நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்படுவது முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும். அது கம்யூனிஸ்ட்டுகளால் மட்டுமே இனி சாத்தியம்.❑

# தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்திடு! இடதுசாரி கட்சிகள் கோரிக்கை

இந்தியத் தேர்தல் ஆணையத்திற்குள் நடந்த மிகப்பெரிய சதியை, அதிகார அத்துமீறலை, ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நடத்திய புலனாய்வு,

வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது. தி இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகவியலாளர் ரித்திகா சோப்ரா இந்தப் புலனாய்வை மேற்கொண்டு உண்மைகளை வெளியிட்டுள்ளார்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மூன்று தேர்தல் ஆணையர்கள் கூட்டாக ஒருமனதாக முடிவு எடுத்து செயல்பட வேண்டும். இணக்கம் காண முடியாத பிரச்சினைகளில் பெரும்பான்மை கருத்தின் அடிப்படையில் செயல்பட வேண்டும் என்ற கோட்பாடுகளை தலைமை தேர்தல் ஆணையர் தகர்த்துள்ளார்.

அவரது விருப்பப்படி, மற்ற இரண்டு தேர்தல் ஆணையர்களின் கருத்துகளையும் ஆட்சே பணைகளையும் எதிர்ப்பையும் நிராகரித்து, சர்வாதி காரப்போக்கோடு தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் செயல்பட்டுள்ளார்.

ஒன்றிய பாஜக அரசின் விருப்பங்களுக்கு ஏற்ப அவர் செயல்பட்டுள்ளார். சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடைமுறைகளைச் சீர்குலைத்துள்ளார் என்ற உண்மை தற்போது வெளிவந்துள்ளது.

நியாயமான தேர்தல் நடைமுறைகளை நிலைநிறுத்தவும் வாக்காளர்களின் வாக்குரிமையைப் பாதுகாக்கவும் தேர்தல் ஆணையத்தின் மற்ற இரண்டு ஆணையர்கள் சுக்பீர் சிங் சந்துவும் விவேக் ஜோஷியும் கடந்த 10 மாதங்களில் குறைந்தது 14 முறை எழுத்துபூர்வமாக தலைமை தேர்தல் ஆணையரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்ற உண்மை வெளிவந்துள்ளது.

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR), வாக்காளர் பதிவு செய்வதற்கான படிவம் 6-ல் “சட்டவிரோதமான”, “அனுமதியற்ற” மாற்றங்கள் செய்தல், தேர்தல் வாக்காளர் பட்டியல் மென்பொருளை மையப்படுத்துதல் உள்ளிட்ட முடிவுகளுக்கு அவர்கள் கடும் எதிர்ப்புகளைத் தெரிவித்துள்ளனர்.

வாக்காளர் பட்டியல் தொடர்பான கட்டுப்பாடுகள் மையப்படுத்தப்படுவது குறித்து, இரண்டு தேர்தல் ஆணையர்களும் மத்திய அமைச்சரவை செயலாளரிடமும் முறையிட்டுள்ளனர். இதன் மூலம் தலைமைத் தேர்தல் ஆணையரின் அதிகார அத்துமீறல் ஒன்றிய




அரசின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டும் அது கண்டு கொள்ளாமல் விடப்பட்டுள்ளது என்பது தெரிய வந்துள்ளது.

இரண்டு தேர்தல் ஆணையர்களின் ஆட்சேபணைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டு, சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, பல்வேறு மாநிலங்கள், ஒன்றியப் பிரதேசங்களில் 13 கோடிக்கும் அதிகமான வாக்காளர்களின் பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியல்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

ஒன்றிய ஆளும் கட்சியான பாஜக, தங்களுக்கு ஆதரவானவர்களை மட்டும் வாக்காளர்களாக நீடிக்க தேர்தல் ஆணையம் மூலம் அனுமதிப்பதும் அதற்காக தேர்தல் ஆணையத்தை தனது கைப் பொம்மையாக மாற்றுவதும் சுதந்திரமான தேர்தல் என்பதை பொருள் இழக்கச் செய்து விட்டது.

வாக்காளர் பட்டியலிலிருந்து பெருமளவில் வாக்காளர்கள் நீக்கப்பட்டதன் மையக் கருவியாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் செயல்பட்டுள்ளார்.

இதன் மூலம் அரசியலமைப்புச் சட்ட ரீதியான ஜனநாயக அமைப்பான தேர்தல் ஆணையத்தின் மீதான மக்களின் நம்பிக்கை தகர்க்கப்பட்டுள்ளது.

அவர் இனியும் அந்தப் பதவியில் தொடர்வதற்கு முற்றிலும் தகுதியற்ற வராகிவிட்டார். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மீதான நம்பிக்கையையும் நம்பகத்தன்மையையும் மீட்டெடுக்க, அவர் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். இந்தியத் தேர்தல் ஆணையம் எடுத்துள்ள முடிவுகளையும் அவை எடுக்கப்பட்ட விதத்தையும் உச்சநீதிமன்றம் தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டும்.

இந்த நெருக்கடியை, 2023ஆம் ஆண்டு பாஜக

அரசு, தலைமைத் தேர்தல் ஆணையரையும் தேர்தல் ஆணையர்களையும் நியமிக்கும் முறையில் செய்த மாற்றங்களிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது.

தலைமைத் தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டம், 2023 மூலம் தேர்தல் ஆணையர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் இருந்த, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாகப் பிரதமர் நியமிக்கும் மத்திய அமைச்சரவை அமைச்சர் ஒருவர் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டார்.

அந்த மாற்றம் ஜனநாயக நிறுவனமான தேர்தல் ஆணையத்தின் சுதந்திரத்தன்மையை பலவீனப்படுத்திவிட்டது. ஒன்றிய ஆளும் கட்சியின் கைப் பொம்மையாக தேர்தல் ஆணையம் மாற வழிவகுத்துவிட்டது. இந்த மாற்றம் ரத்து செய்யப்பட்டு, பழைய முறையே கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

தேர்தல் ஆணையத்தின் அரசியலமைப்புச் சட்டப் பொறுப்பு மிகவும் தெளிவான ஒன்றாகும். வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு குடிமகனும் வாக்களிப்பதற்கான உரிமையினையும் அச்சமின்றி வாக்களிக்கும் வாய்ப்பையும் பாதுகாத்து உறுதி செய்வதே அதன் முதன்மைக் கடமையாகும். தேர்தல் ஆணையம் எந்தச் சூழ்நிலையிலும் அந்தக் கடமையை கைவிடக்கூடாது என வலியுறுத்துகிறோம்.

கோடிக்கணக்கான வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமையைப் பறித்து, இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது தாக்குதலை நடத்தியமைக்கும், சீர்குலைத்தமைக்கும் பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் பொறுப்பேற்க வேண்டும்.

உடனடியாக தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். அவர் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) விடுதலை வலியுறுத்துகின்றன.

இக்கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் வரும் வியாழக்கிழமை (01.10.2026) இடதுசாரி கட்சியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான நாடு தழுவிய இந்தப் போராட்டத்தில் அனைத்து பகுதி மக்களும் கலந்து கொள்ள வேண்டும்.

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்);**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி;**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) விடுதலை**




தலைமைத் தேர்தல் அதிகாரி ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி இடதுசாரிக் கட்சிகள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றன. இந்தியன் எக்ஸ்பிரஸ் புலனாய்வுச் செய்தி வெளியான உடனேயே இகக(மாலெ) விடுதலை பொதுச் செயலாளர் தோழர் திபங்கர், தோழர் யோகேந்திரயாதவ், மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூசன், அகில இந்திய மாணவர் சங்கத்தின் தேசியத் தலைவர் தோழர் நேகா, ஏஐசிசிடியு பொதுச் செயலாளர் தோழர் ராஜீவ் டிம்ரி, மத்தியக் குழு தோழர் ரவிராய் உள்ளிட்ட பல தோழர்கள் டெல்லி ஜந்தர் மந்தரில் பேரணியாகச் சென்றனர். அவர்கள் அனைவரையும் அமித்ஷாவின் காவல்துறை கைது செய்தது.




29ம் தேதி இகக(மாலெ) மத்தியக்குழு உறுப்பினர்கள் சுசேதா டே, ஸ்வேதா ராஜ், இகக(மா) பொதுச்செயலாளர் தோழர் எம்.ஏ.பேபி, பிருந்தா கரத் மற்றும் இகக(மாலெ), ஏஐசிசிடியு, ஆர்ஒய்ஏ, அய்சா, அய்லாஜ் தோழர்களும் இகக. இகக(மா) தோழர்களும் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரி டெல்லி தலைமை தேர்தல் ஆணையம் முன்பு போராட்டம் நடத்தி காவல்துறையால் கைது செய்யப்பட்டனர்.



# ஊராட்சிகளை போராட்ட மய்யங்களாக ஆக்குவோம்; கிராமப்புர தொழிலாளரை அரசியல் சக்தியாக மாற்றுவோம்!

“மாற்றம்” எனும் முழக்கத்தோடு ஆட்சியைப் பிடித்த தவெக, கிராமப்புர சமுதாயத்தை புறக்கணிக்கும் பெரும் ‘ஏமாற்றத்தோடு’ அதன் முதல் நிதிநிலை அறிக்கையை தந்துள்ளது.

தமிழ்நாடு மிக வேகமாக நகர்மயமாகி வரும் மாநிலம். ஆனால் 3.72 கோடி பேர் கிராமப்புர சமூக மக்கள். இந்த 51.55 % மக்களை புறக்கணிப்பதாகவே ஆட்சி வழிப்பாதை உள்ளது. ஆட்சி தொடங்கியது முதலே போராடத் தொடங்கிய விவசாயிகள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். விவசாய நிதிநிலை அறிக்கை என்னும் திமுக ஆட்சி போட்ட பாதையில் தொடர்ந்து செல்லும் தவெக திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையில் ரூ 32,264 கோடி குறைவாக ஒதுக்கியுள்ளது. விவசாயத்தையும் விவசாய சமூகத்தையும் எந்த அளவு இந்த ஆட்சி புறக்கணிக்கிறது என்பதற்கு இது தெள்ளத் தெளிவான எடுத்துக் காட்டு.

கடுமையான வேலை இன்மையும் கொடுமையான கடன் சங்கிலியும் பிடித்தாட்டும் கிராமப்புர தொழிலாளர் பற்றி இன்னும் மோசமான புறக்கணிப்பைக் காட்டுகிறது தவெக ஆட்சி. வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டங்களோ, கடன் வலையிலிருந்து ஏழைகளை மீட்கும் திட்டங்களோ எதுவும் இல்லை. ஒன்றிய மோடி அரசு 125 நாள் கிராமப்புர வேலை தருவதாகக் கூறி ஒருபுறம் கிராமப்புர வறியவர்களை வஞ்சிக்கிறது. மறுபுறம் மாநில அரசுகள் மீது 40 விழுக்காடு நிதிச் சுமையை ஏற்றி தள்ளாட வைக்கிறது. இதைப்பற்றி கேள்வி எழுப்ப மறுக்கும் நிதிநிலை அறிக்கை, “வரலாறு காணாத வகையில்”, தனது சொந்த நிதியாக 5000 கோடி ஒதுக்கியுள்ளதாக பெருமை பேசிக் கொள்கிறது. கூடுதல் வேடிக்கை என்னவென்றால், மேலும் 25 நாட்கள் வேலை வழங்க ரூ. 100 கோடி ஒதுக்கி தன் முதுகில் தானே தட்டிக் கொள்கிறது. மிக முக்கியமான ரகசியம் 125 நாட்கள் வேலை செய்தவர்களுக்குதான் இந்த கூடுதல் 25 நாள் வேலை வழங்கப்படுமாம். மோடி ஆட்சியில் 125 நாள் வேலை வழங்கப்போவதில்லை. எனவே தவெக ஆட்சிக்கு கூடுதலாக 25 நாள்கள் வேலை வழங்கும் அவசியம் ஏற்படப் போவதில்லை. இந்த ஆட்சி கிராமப்புர வறியவர்களை எவ்வாறு குரூரமாக ஏமாற்றுகிறது என்பதற்கு இது ஆணித்தரமான எடுத்துக் காட்டு.

அறுபது ஆண்டு திராவிட ஆட்சிகள் கிராமப்புர பெரும் பணக்காரர்களை (குலாக்குகள்) மய்யமாகக் கொண்டு செயல்படுத்திய தவறான பொருளாதாரக் கொள்கைகள் தீராத விவசாய நெருக்கடியை விளைவித்தது. அதை ஏழை சிறு, குறு விவசாயிகளும் விவசாயத் தொழிலாளரும்தான் அறுவடை செய்தனர். ‘90 களில் தொடங்கப்பட்ட தவறான நவதாராளவாதப் பொருளாதாரக் கொள்கைகள் பலவகையிலும் விவசாயத்தை முற்றிலும் அழித்து வருகின்றன. அழிவுகரமான இந்தப் பாதையை ஒரு நிதிநிலை அறிக்கையிலோ அல்லது ஒரு அய்ந்தாண்டிலோ தலைகீழாக மாற்றிவிட முடியாதுதான். ஆனால், மாற்றுவதற்கான விருப்பமோ, உறுதியோ தெரியவேண்டும். அது கிஞ்சித்தும் நிதிநிலை அறிக்கையில் தெரியவில்லை. மாறாக திராவிடக் கட்சிகளைவிடவும் மிக வேகமாக, வெகு தீவிரமாக இந்த தவறான பொருளாதாரப் பாதையில் இந்த ஆட்சி செல்லத் துணிந்து விட்டது. விவசாய பொருளாதாரத்தையும் கிராமப்புர விவசாய சமூகத்தையும் ஏகாதிபத்திய–கார்ப்பரேட் கூட்டங்களின் வேட்டைக் காடாக்கும் ஒன்றிய அரசின் கொள்கைகளைத் தடுத்து நிறுத்தி விவசாயிகளை பாதுகாக்க வேண்டியது மாநில ஆட்சியின் கடமைப் பொறுப்பு. பல பத்தாண்டுகளாக ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பு நெருக்கடியால் உருவான பெரும் துயரத்தை அதே வழியில் தீர்க்க முடியாது. நிலச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாய சீர்திருத்தம், விலை வீழ்ச்சியிலிருந்து பாதுகாப்பு, லாபகரமான வருமானம், வேலை வாய்ப்பு, வாழ்வாதார பாதுகாப்பு உள்ளிட்டவற்றை உறுதிப்படுத்த வேண்டும். இதுவே மாற்றுப்பாதை. மாற்றத்துக்கான வழி. சுதந்திரத்துக்குப் பிறகு வந்த காங்கிரஸ் ஆட்சி உட்பட கடந்த ஆட்சிகள் செய்யத் தவறியதை செய்யத் துணிவதே இப்போதைய தேவை. அப்படி ஒரு பொறுப்பு, துணிச்சல் இந்த அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்நாட்டின் நீண்ட சமூகப் பொருளாதார விழுமியங்களில் வேர் கொள்ளாத தவெக, பெரும்பாலான சமூக மக்களின் எதிர்பார்ப்புகளையும் விருப்பங்களையும் புரிந்துகொள்ள முடியவில்லை. அல்லது புரிந்துகொள்ள விரும்பவில்லை. அதிகாரப் பசி, ஆட்சிக்கான போட்டி என்பது பிரதானமாக இருந்தாலும் விவசாயிகள், தொழிலாளர், மாணவர், பெண்கள் என வெகுமக்கள் இயக்கங்களையும் போராட்டங்களையும் திராவிட ஆட்சிகள் எதிர்கொண்டன. ஒருபக்கம் ஆளும் வர்க்கங்களின் அன்பை பெறுவதிலும் மறுபக்கம் ஏழை பாழைகளின் வாக்குகளைப் பெறுவதிலும் காட்டிய திறமையே ‘தொழில் வளர்ச்சியும் நலத்திட்ட அரசியலும்’. அவ்வப்போது வறியவர் நலனை எதிரொலிப்பதைப் போல காட்டிக் கொண்டனர்.

தவெகவுக்கென்று குறிப்பிட்ட வர்க்க, சமூக அடையாளம் ஏற்படாத நிலையில் அதை சரிக்கட்டும் திசையில் தான் தவெக தூய்மைப் பணியாளர் பிரச்சனையில் தன்னை நிரூபித்துக் கொள்ள பெரிதும் பாடுபடுகிறது. ஆனாலும் அது நங்கூரமிட்டிருப்பது ‘அண்ணன் சீர்’, ‘தாய்மாமன் தங்க மோதிரம்’ (கொள்கைத் தலைவர் பெரியார் ஆசிர்வதிக்கட்டும்) போன்ற

பின்னோக்கிய நலத்திட்டங்கள் மீதே.

கிராமப்புர உண்மை நிலையைப் புரிந்து கொண்ட தவெக, தனது நகர்ப்புர நங்கூரத்துக்கு இணையாக கிராமப்புரங்களிலும் காலூன்ற முயற்சிக்கிறது. ஆனால் அங்கும் கூட அதிமுகவிலிருந்து ஆட்களை உருவும் வேலைக்கு கூடுதலாக, வேறுபல கட்சிகளிலிருந்தும் உருவி உருவம் கொள்ள முயலுகிறது. முக்கிய கட்சிகளால் புறக்கணிக்கப்பட்டவர்கள் எளிதில் ஆதாயம் தேடும் லும்பன்சக்திகள் தவெக நோக்கி திரும்புகின்றன. தவெகவும் அவர்களுக்கு கை கொடுக்கிறது. கோட்டை அதிகாரம் மட்டும் போதாது. குக்கிராம அதிகாரமும் தேவைப்படுகிறது. தவெகவின் எதிர்காலம் பெரிதும் இதைத்தான் நம்பியிருக்கிறது.

எனவே,கிராமங்களில் புதிய சூழலை எதிர்கொள்ளும் "மாற்றத்துக்கான" சக்திகள், குக்கிராமங்களில் ஏழைகளுடன், பலவகை தொழிலாளருடன் வலுவாக கரம் கோர்க்க வேண்டும்; வலுப்பெற வேண்டும்.

நீடித்த, உறுதிமிக்க, சலிக்காத, ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலம் தூய்மைப் பணியாளர் சட்டமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் பேசுபொருளாகி உள்ளனர். அரசியல் அரங்கில் கால்பதித்துள்ளனர். ஒரு கோடிக்கும் மேற்பட்ட விவசாய கிராமப்புர தொழிலாளரும் அரசியலில் கால்பதிக்க முடியும். பாஜக, தவெக ஆட்சிகளை நோக்கி சக்தியை திரட்டிட வேண்டும். அதற்கு ஊராட்சிகளை ஏழைகள் அணிதிரளும் போராட்ட மய்யங்களாக மாற்ற வேண்டும். எதிர்வரும் அவிகிதொச மாநில மாநாடு இதற்கான ஒத்திகையின் துவக்கமாக இருக்க வேண்டும். ❑

— பாசு

## பலிபீடத்தில் பூக்கள் பூக்கின்றன

## (கரப்பான் – நாவல் குறித்து)

**மு. அ. அக்பர்**

தன்னியல்பில் நிலவுடைமை சமூகத்தைவிட முதலாளித்துவ சமூகம் நவீனமானது. அதன் போலி ஜனநாயகம், சுரண்டல் முறை, சமூக உறவுகளைக் குலைத்துப் போடுகிறது. விதிப்படி, உற்பத்தி சக்திகள் எதிர்கொள்ளும் முரண்கள், ஒரு முற்போக்கு சமூகத்தை நோக்கி நகர்த்தும்போது, முதலாளித்துவம் பின்நவீனத்துவம் எனும் ஒரு போலியான முற்போக்கு சித்தாந்தத்தை அது நிலவுகின்ற சமூக ஒழுங்கை கேள்வி கேட்டு உடைப்பதன் மூலம் புரட்சிகரமானதாய் காட்டிக் கொள்கிறது. ஜனநாயகப்பட வேண்டிய குடும்ப அமைப்பை நுகர்வு வெறிகொண்ட வணிக நிறுவனமாகக் கட்டமைக்கின்றது. மனித இயல்புகளை மீறச்சொல்கின்றது. இறுதியில் கார்ப்பரேட் உலகினை படைக்கின்றது. இன்றைய நிகழ்காலத்தில், 'வலியது பிழைக்கும்' என்ற விதியை அடிப்படையாக நிறுவும் கார்ப்பரேட் உலகு குறித்து, தோழர். அரிசங்கரின் 'கரப்பான்' நாவல் பேசுகிறது.

கார்ப்பரேட் நிறுவனமொன்றில் பணிபுரியும் சுனில் என்பவரைச் சுற்றி நிகழ்கின்றது நாவல். மனிதனின் அறத்தை மீட்டெடுப்பதில் பிரதானமான ஒன்று குற்ற உணர்ச்சி. தனி மனிதன் மட்டுமன்றி சமூகத்தின் குற்றவுணர்வுதான் கூட்டு மனசாட்சியுமாக இருக்கின்றது. இந்த உணர்வினை ஒழிப்பதில் பெரும் வெற்றி பெற்ற கார்ப்பரேட் உலகு சுனில் போன்றவர்களை உருவாக்குகிறது. சுனிலின் பயணத்தில் உடன் பணிபுரிபவர்களோ, உறவுகளோ, மனைவியோ கூட, யாரும் ஒரு பொருட்டல்ல. அனைத்தையும் மிதித்துத் துவைத்துக் கொண்டு வாழ்க்கையை அடைந்துவிட ஓடுகின்றான். எதனையும் அடைய முடியாத இந்த ஓட்டத்தில் தோற்றுப் போகின்றான்.

அரிசங்கரின் படைப்புகள் எல்லாவற்றிலும் குற்றம் சாட்டும் தொனி இருப்பதில்லை, வாழ்வினை அப்பட்டமாக அப்படியே எழுதிப் போகின்ற நடையிது. வேறு வழியின்றி வாசக மனம் நாவலுக்குள் இறங்கி விமர்சிக்கத் தொடங்குகின்றது. அதுவே நாவலின் ஒரு இன்விசிபிள் பாத்திரமாக மாறிவிடுகிறது. அரிசங்கரின் முந்தைய படைப்புகளில் தன்பாலின உறவுகள் உடல் குறித்த உரையாடல், உடல் மீதான வன்முறை பற்றி எல்லாம் தயக்கமின்றி எழுதி இருப்பார். ஆனால் பெண்களின் அகவுலகம் பற்றியோ, பெண்ணின் பார்வை பற்றியோ குறிப்பிட தகுந்த அளவில் எழுதப்படவில்லை. ஆனால் 'கரப்பான்' பெண்கள் வாழ்வை எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பது பற்றிப் பேசுகிறது.

'கரப்பான்'–ல் வருகிற பெண்கள் அற்புதமானவர்கள். கார்ப்பரேட் உலகினை வெற்றிகரமாக எதிர்கொள்கின்றனர், தங்கள் வாழ்க்கையை தங்களின் கைகளில் வைத்துக் கொள்கின்றார்கள். பிறர் யாரும் கையாள அனுமதிப்பதில்லை. பதட்டமின்றி அமைதியாக வாழ கற்றுக் கொள்கின்றார்கள், சுனில் போன்றவர்களை எளிதாகக் கடந்து போகின்றார்கள். தொன்மக் கதைகளில் பேசாத பொருட்களே கிடையாது. இந்நாவலில் வீட்டிலிருக்கும் சட்டை, கோப்பை போன்ற பொருட்கள் பேசுகின்றன. அது நாவலுக்கு ஆழ்ந்த அர்த்தமூட்டுகின்றது. பின்நவீனத்துவ மரபின் கதையாடலை உடைத்துப் போடுகின்றது. 'கரப்பான்' குற்றவுணர்வற்ற அரசுகள், அமைப்புகள் உருவாகி இருப்பதன் அடிப்படையே கார்ப்பரேட் உலகின் 'வலியது பிழைக்கும்' என்ற அறமற்ற, கொடிய விதிதான். இந்த வெறியாட்டத்திற்கு எதிராக வாழ்தல் குறித்தும், மனிதம் குறித்தும், நம்மோடு உரையாடுகிறது 'கரப்பான்'.

**நூல் ஆசிரியர்:** அரிசங்கர், புதுச்சேரியைச் சேர்ந்தவர். சமகால வாழ்வியலையும் மனித மனங்களின் நுட்பங்களையும் தன் தனித்துவமான கதையாடலின் மூலம் பதிவு செய்து வருபவர். தமிழ் விக்கி உள்ளிட்ட இலக்கியத் தளங்களில் இவரது பங்களிப்புகள் பரவலாகக் கவனிக்கப்படுபவை. 'பாரிஸ்', 'மாகே கஃபே', 'உடல்', 'உண்மைகள் பொய்கள் கற்பனைகள்', 'சப்தங்கள்' மற்றும் 'அரிசங்கர் கதைகள்' உள்ளிட்ட பல முக்கிய நூல்களை எழுதியுள்ளார். நவீன சிறுகதை மற்றும் நாவல் உலகில் தன் எழுத்துக்களால் தனக்கென ஒரு வாசகர் பரப்பை உருவாக்கியுள்ளார்.

**எதிர் வெளியீடு, விலை: ரூ.160**

# இன்னும் அதிகமான ஒற்றுமையுடனும் வலுவான உறுதியுடனும் அகில இந்திய விவசாயிகள் மகாசபை வீறுநடை போடட்டும்



**[செப் 19 – 20 ஜலந்தரில் நடைபெற்ற அகில இந்திய விவசாயிகள் மகாசபையின் (ஏஐகேஎம்) 5வது தேசிய மாநாட்டில் தோழர் திபங்கர் ஆற்றிய உரையின் சுருக்கப்பட்ட வடிவம்]**

அகில இந்திய விவசாயிகள் மகாசபை 5வது மாநாட்டின் சிறப்பம்சம் என்னவென்றால், ஏற்கனவே இணைந்து செயல்பட்டு வரும் பஞ்சாப் விவசாயிகள் சங்கம் (பிகேயு), பஞ்சாப், ஹரியானாவின் இரு முன்னணி விவசாய அமைப்புகளான ஜமூரி விவசாயிகள் சபை, பக்டி சம்பால் ஜட்டா ஆகியன ஏஐகேஎம் பதாகையின் கீழ் ஒன்றிணைந்ததுதான்.

விவசாயத்தை கார்ப்பரேட்டுகள் கையகப்படுத்தி வரும் தொடர் அபாயத்துக்கு மத்தியில், விவசாயிகள் இயக்கம் ஏகாதிபத்தியத்தின் தீவிரமான அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் இச்சமயத்தில், டெல்லி எல்லையில் வரலாற்றுச் சிறப்புமிக்க விவசாயிகள் போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்த இந்த மூன்று அமைப்புகள், புதிய சிவப்பு–பச்சை கொடியை ஏற்று, ஒரே அமைப்பாக இணைந்திருப்பது மிகவும் உத்வேகமளிக்கும் ஒரு வளர்ச்சியாகும்.

இந்த மூன்று அமைப்புகளும் கம்யூனிச பாரம்பரியத்தில் இருந்து தோன்றியவை; எனவே, இந்தியாவின் தீவிரமடைந்து வரும் விவசாய நெருக்கடிக்கு தீர்வாக அமையும் விவசாயப் புரட்சி என்ற கம்யூனிச செயல்திட்டத்திற்கும், கம்யூனிச இயக்கத்திற்கும் இந்த ஒருங்கிணைப்பு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆகையால், உழவர் இயக்கத்தில் உள்ள கம்யூனிச அணுகுமுறை குறித்த சில அடிப்படைகளை இந்தத் தருணத்தில் மீண்டும் வலியுறுத்துவது பொருத்தமானதாக இருக்கும்.

இயல்பாகவே விவசாயிகள் பொறுமையானவர்கள், பயிர்கள் வளரும் வரை எப்படி காத்திருக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். விவசாயத்தின் உள்கட்டமைப்பு நெருக்கடிகள் எங்கும் பரவியுள்ள நிலையில், அடிக்கடி ஏற்படும் பயிர் இழப்புகளை விவசாயிகள் நன்கு அறிவார்கள். மேலும் நீண்ட கால நெருக்கடியைச் சமாளிக்கத்தக்க விடாமுயற்சியும் மீள்திறனும் அவர்களுக்கு உண்டு.

விவசாயிகளின் இந்தப் பொறுமையையும் விடாமுயற்சியையும் பழமைவாதத்தின் அடையாளங்களாக கம்யூனிஸ்டுகள் தவறாகப் புரிந்து கொள்வதில்லை. விவசாயிகளை சமூகப் பிற்போக்குத்தனத்தின் கோட்டையாக கம்யூனிஸ்டுகள் பார்ப்பதில்லை. மாறாக, உழவர் சமூகம், தாம் உயிர் வாழ்வதற்காக போராடுவது மட்டுமின்றி, சமூக மாற்றத்திற்கான நீண்ட நெடிய போராட்டத்தையும் முன்னெடுக்கும் ஒரு போராட்ட சக்தியாகவே கம்யூனிஸ்டுகளால் அங்கீகரிக்கப் படுகிறது.

அதனால்தான், தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர இயக்கமாகத் தொடங்கிய கம்யூனிச இயக்கம், உழவர் சமூகத்தின் மாபெரும் புரட்சிக ஆற்றலை விரைவில் கண்டறிந்தது. சோசலிசத்தின் முக்கிய அடித்தளமாக தொழிலாளர் – உழவர் கூட்டணி அமையும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தொலைநோக்குப் பார்வையை முன்வைத்தது.

அதேசமயம் கம்யூனிஸ்டுகள், விவசாயிகளை ஒருபடித்தான சமூகமாக கருதுவதில்லை. விவசாயத்தில் நேரடியாக ஈடுபட்டுள்ள சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பல பொதுவான பண்புகளையும் பாதிப்புகளையும் பகிர்ந்து கொண்டாலும், விவசாய சமூகத்திற்குள் அல்லது விவசாயம் சார்ந்த மக்கள் மத்தியில், பணக்கார விவசாயிகள் தொடங்கி நிலமற்ற ஏழைத் தொழிலாளர்கள், குத்தகை நிலத்தில் சாகுபடி செய்யும் விளிம்புநிலை விவசாயிகள் வரை பல்வேறு வர்க்கங்கள் உள்ளன என்ற உண்மையை கம்யூனிஸ்டுகள் ஒருபோதும் மறந்ததில்லை.

இந்த மாநாட்டிற்காக ஜலந்தருக்கு யாருடைய பெயரை நீங்கள் சூட்டியுள்ளீர்களோ, அந்த சுவாமி சஹஜானந்த் சரஸ்வதியின் காலத்திலிருந்தே, கம்யூனிஸ்டுகள், நமது சமூகத்தில் வரலாற்று ரீதியாக மிகவும் ஒடுக்கப்பட்ட பிரிவினரான நிலமற்ற ஏழைத் தொழிலாளர்கள், விளிம்புநிலை விவசாயிகள் மீதுதான் முதன்மையாக கவனம் செலுத்தியுள்ளார்கள். அதுதான், வங்கத்தின் மாபெரும் தெபாகா இயக்கம், கேரளாவின் புன்னப்புரா–வயலார், ஒருங்கிணைந்த ஆந்திரப் பிரதேசத்தின் தெலுங்கானா அல்லது பஞ்சாபின் முஸாரா லெஹர் ஆகியவற்றின் வாரிசாக நக்சல்பாரி உழவர் எழுச்சி தோன்றக் காரணமானது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, பீகாரின் புரட்சிகர உழவர் இயக்கம் குறித்து, ”பீகாரின் பற்றியெறியும் வயல்வெளிகளிலிருந்து ஒரு அறிக்கை” என்ற, விபரங்களால் நிறுவப்பட்டதோர் பதிவை நாங்கள் வெளியிட்டோம். அந்தப் புத்தகத்தின் முன்னுரையில், இந்தியாவின் விவசாயப் போராட்டங்களில் வீசும் கிழக்கு, மேற்கு காற்றுகளுக்கு (சித்தாந்தங்களுக்கு) இடையிலான மோதலைப் பற்றி தோழர் வினோத் மிஸ்ரா குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் நடந்த மாபெரும் விவாதத்தின் போது, சோசலிசத்தின் முன்னேற்றத்தை கீழைக் காற்றாகவும், மேற்கத்திய முதலாளித்துவத்தை மேற்குக் காற்றாகவும் உருவகப்படுத்தி மாவோ பயன்படுத்திய “மேற்கத்திய காற்றுக்கு எதிரான கீழை காற்று’ என்ற உருவகத்தை தழுவி அவர் பயன்படுத்தினார். இந்தியச் சூழலில், பசுமைப் புரட்சி நெருக்கடியின் பின்னணியில், மகாராஷ்டிராவிலிருந்து சரத் ஜோஷியால் தொடங்கப்பட்டு வளர்ந்து வந்த பணக்கார விவசாயிகளின் இயக்கத்திற்கு ‘மேற்கு காற்று’ என்ற உருவகத்தை தோழர் வி.எம் பயன்படுத்தினார். அதே சமயம் ‘கீழை காற்று’ என்பது கம்யூனிஸ்ட்கள் தலைமையிலான பீகாரின் புரட்சிகர உழவர் இயக்கத்தைக் குறித்தது.

இந்த இரண்டு காற்றுகளும் வரலாற்றுச் சிறப்புமிக்க டெல்லி எல்லைப் போராட்டத்தில் சந்தித்து, கார்ப்பரேட்டுக்கு ஆதரவான விவசாயச் சட்டங்களை ரத்து செய்யுமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தன. ஒரு பரந்த கார்ப்பரேட் எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்புச் சூழலில் அவை ஒருங்கிணைந்து செயல்படுவதை அந்த இரு காற்றுகளுக்கு இடையிலான அடிப்படை முரண்பாடு தடுக்கவில்லை என்பதை தெளிவு படுத்தியது. கிழக்கு-மேற்கு முரண்பாடு என்பது இந்தியாவின் கிழக்கு, மேற்குப் பகுதிகளுக்கு இடையிலான, புவியியல் ரீதியான முரண்பாடு அல்ல; அது இந்தியா முழுவதிலும் பரவியுள்ளது. மகாராஷ்டிரா மற்றும் பஞ்சாபிற்குள்ளும், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதில் கம்யூனிஸ்ட் தலைமையிலான விவசாயிகள் இயக்கம் உறுதியாக நின்றுள்ளது. மேலும் பீகாரில் நிலச்சீர்திருத்த ஆணையத்தின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிலப்பிரபுத்துவ சக்திகள் இரத்தக் களரியை ஏற்படுத்துவோம் என்று அச்சுறுத்திய பின்னணியில், 1857 ஆம் ஆண்டின் மாபெரும் சுதந்திரப் போரின் 153வது ஆண்டு நினைவு நாளான மே 10, 2008 அன்று, ஏஐகேஎம் தனது பயணத்தைத் தொடங்கியது.

கார்ப்பரேட் மற்றும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பிற்கு எதிராக இந்தியாவின் விவசாய மக்களைப் பாதுகாக்கவும், பாசிசத்திலிருந்து விடுபடுவதற்காக இந்தியா முன்னெடுத்து வரும்போரைவலுப்படுத்தவும்,சமத்துவசமூகஅமைப்பைக் கோரும் நீண்ட நெடிய போராட்டத்தை முன்னெடுக்கவும், மேலதிக வலிமையுடனும், புதுப்பிக்கப்பட்ட உறுதியுடனும் புரட்சிகர உழவர் இயக்கத்தின் பயணம் இன்று ஒரு புதிய கட்டத்திற்குள் நுழைகிறது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நீண்ட நெடிய பயணத்தில், அகில இந்திய விவசாயிகள் மகாசபையின் 5வது மாநாடு மாபெரும் வெற்றி பெற சிபிஐ(எம்எல்) வாழ்த்துகிறது.❑

# அகில இந்திய விவசாயிகள் மகாசபையின் 5வது அகில இந்திய மாநாடு

நிலம், விவசாயம் மற்றும் சுதந்திரத்தை” காப்பாற்ற இந்திய நாட்டின் விவசாயிகளும், விவசாய சங்கங்களும் உடனடியாக ஒன்றுபட வேண்டும்” என அகில இந்திய விவசாயிகள் மகாசபை (AIKM) செப்டம்பர் 20,21 தேதிகளில் பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் நடைபெற்ற தனது 5வது அகில இந்திய மாநாட்டில் அறைகூவல் விடுத்தது.

**செப்.20 விவசாயிகள்- தொழிலாளர்கள் ஒற்றுமைப் பேரணி**

AIKM-ன் 5வது அகில இந்திய மாநாடு ஒரு பேரணி, பொது மாநாட்டோடு துவங்கியது. செப்டம்பர் 20 ல், ஜலந்தரில் உள்ள தேஷ்பகத் யாத்கார் வளாகத்தில், தியாகி பகத்சிங் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட அந்த விவசாயிகள்- தொழிலாளர்கள் ஒற்றுமைப் பேரணியில் (கிசான் – மஸ்தூர் ஏக்தா பேரணி”யில்), பஞ்சாபின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பல்லாயிரக் கணக்கான விவசாயிகளும் தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

பிரம்மாண்டமான அந்த பொது மாநாட்டு அரங்கம் நிரம்பி வழிந்தது. திரைகள் அமைக்கப்பட்ட பூங்கா, வளாகத்தின் மற்ற அரங்குகள் மட்டுமல்லாமல், சாலைகளிலும் ஆயிரக்கணக்கானோர் நின்றபடியே தங்கள் தலைவர்களின் உரைகளைக் கேட்க வேண்டியிருந்தது.

“வயல்களையும், விவசாயத்தையும், சுதந்திரத்தையும் காப்போம்; கார்ப்பரேட் கொள்ளையின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவோம்!” என்பது மாநாட்டின் முக்கிய முழக்கமாக இருந்தது.

AIKM தேசியத் தலைவரும் முக்கிய விவசாயத் தலைவருமான ருல்து சிங் மான்சா, தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி, தியாகிகள் நினைவிடத்தின் அருகே சங்கக் கொடி ஏற்றியதுடன், திறந்தவெளி பொது மாநாடு துவங்கியது.

சிபிஐஎம்எல் லிபரேஷன் பொதுச் செயலாளர் தோழர் திபங்கர், RMPI பொதுச் செயலாளர் தோழர் மங்கத்ராம் பாஸ்லா, ஜமூரி கிசான் சபா தலைவர் தோழர் டாக்டர் சத்னாம் சிங் அஜ்னாலா, AIKM பொதுச் செயலாளர் தோழர் ராஜாராம் சிங், செயலாளர் புருஷோத்தம் சர்மா, ஜமூரி கிசான் சபா பொதுச் செயலாளர் தோழர் குல்வந்த் சிங் சந்து; RMPI பஞ்சாப் மாநிலச் செயலாளர் தோழர் பர்கத் சிங் ஜம்ராய், சிபிஐஎம்எல் லிபரேஷன் மத்தியக் குழு உறுப்பினர் தோழர் ராஜ்விந்தர் சிங் ராணா ஆகியோர் பங்கேற்ற முக்கியத் தலைவர்கள் ஆவர்.

ஜம்ஹூரி கிசான் சபாவின் மாநிலத் தலைவர் டாக்டர் சத்னாம் சிங் அஜ்னாலா தொடங்கி வைத்தார். புருஷோத்தம் சர்மா மற்றும் பர்கத் சிங் ஜம்ராய் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். மங்கத்ராம் பாஸ்லா எழுதி, பதௌர் சங்கீத மண்டலி பாடிய ஒரு கஸலும் நிகழ்ச்சியில் பாடப்பட்டது.

சிபிஐஎம்எல் லிபரேஷன் பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் முக்கிய உரையை நிகழ்த்தினார். RMPI பொதுச் செயலாளர் தோழர் மங்கத் ராம் பாஸ்லா சிறப்புரையாற்றினார். நாடாளுமன்ற உறுப்பினரும் AIKM தேசியப் பொதுச் செயலாளருமான தோழர் ராஜா ராம் சிங்; JKS பொதுச் செயலாளர் குல்வந்த் சிங் சந்து; AICCTU பொதுச் செயலாளர் தோழர் ராஜீவ் டிம்ரி; அனைத்திந்திய விவசாய மற்றும் கிராமப்புறத் தொழிலாளர்

சங்கத்தின் தேசியத் தலைவர் தோழர் சத்யதேவ் ராம்; மத்தியப் பிரதேச கிசான் சங்கர்ஷ் சமிதியின் ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் சுனிலம்; அகில இந்திய விவசாயிகள் சங்கம் – அஜய் பவன் ( AIKS – CPI) தேசியத் துணைத் தலைவர் பல்தேவ் சிங் நிஹால்கர்; பஞ்சாப் கீர்த்தி கிசான் யூனியனைச் சேர்ந்த தோழர் நிர்பய் சிங்; பஞ்சாப் மஸ்தூர் முக்தி மோர்ச்சா தலைவர் கோபிந்த் சிங் சஜ்லி; தேஹாத்தி மஸ்தூர் சபா தலைவர் தர்ஷன் நஹர்; AISA மாணவர் சங்க தலைவர் அமீன் உள்ளிட்டோரும் உரையாற்றினர்.

மாநாட்டை முன்னிட்டு, அகில இந்திய கிசான் சபாவின் தலைவர் தோழர் அசோக் தவாலே, பொதுச் செயலாளர் தோழர் பிஜு கிருஷ்ணன், அகில இந்திய விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் தோழர் சத்யவான் ஆகியோரும் தங்கள் அமைப்புகளின் சார்பில் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தனர்.

தோழர் மங்கத் ராம் பாஸ்லாவின் உரையாற்றுகையில், "பஞ்சாபில் துவங்கியுள்ள விவசாய சங்கங்களின் ஒற்றுமை அலை நாடு முழுவதும் பரவி, இந்தியா முழுவதும் உள்ள விவசாயிகள் மற்றும் தொழிலாளர் அமைப்புகளை ஒன்றுபடத் தூண்டும். என்றார். RSS-BJP-யின் சித்தாந்தம் தொழிலாளர்கள், விவசாயிகள், தலித்துகள், சிறுபான்மையினர், ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சிக்கு எதிரானது. இந்த அரசை அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்கு நாட்டின் புரட்சிகர, ஜனநாயக மற்றும் தேசபக்த சக்திகளின் பரந்த ஒற்றுமை இன்றைக்கு மிகஅவசியமாக உள்ளது என்றார். பகவந்த் மான் தலைமையிலான பஞ்சாப் அரசு "மாற்றம்" என்ற முழக்கத்துடன் ஆட்சிக்கு வந்தாலும், அரசு அலுவலகங்களில் தியாகி பகத்சிங் மற்றும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆகியோரின் படங்களை வைத்ததைத் தவிர, மாநிலத்தில் அர்த்தமுள்ள எந்த மாற்றமும் காணப்படவில்லை... பொருளாதாரத் துறையிலும், காவல்துறை மற்றும் அதிகார வர்க்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும் அரசு முற்றிலும் தோல்வியடைந்துள்ளது... பாஜகவின் பொய்யான கூற்றுகளை பஞ்சாப் மக்கள் முற்றிலும் நிராகரிக்க வேண்டும், வரவிருக்கும் தேர்தலில் விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களுக்காக எந்த சமரசமுமின்றிப் போராடும் உண்மையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

தோழர் ராஜா ராம் சிங், "காசா, ஈரான் மீதான தாக்குதல்கள் மூலம் உலகம் முழுவதும் உள்ள இயற்கை வளங்களையும் வளமான நிலங்களையும் அமெரிக்க ஏகாதிபத்தியம் கைப்பற்ற முயற்சித்து வருகிறது; வெனிசுலாவை ஆக்கிரமிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது... இந்திய அமெரிக்க

சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பாக மோடி அரசு டிரம்ப் நிர்வாகத்தின் முன் பணிந்திருந்தாலும், இந்திய நாட்டின் விவசாயிகளும் தொழிலாளர்களும் இத்தகைய நடவடிக்கைகளை உறுதியாக எதிர்ப்பார்கள். ஜலந்தரில் உருவாக்கப்பட்டுள்ள விவசாய சங்கங்களின் ஒற்றுமை, நாடு முழுவதும் விவசாயிகள் இயக்கத்தை வலுப்படுத்தும்" என்று கூறினார்.

**பிரதிநிதிகள் அமர்வு**

மாலை 6 மணிக்கு பாபா ஜ்வாலா சிங் அரங்கில் பிரதிநிதிகள் அமர்வு தொடங்கியது. பிரதிநிதிகள் அமர்வை நடத்துவதற்காக ஏழு பேர் கொண்ட தலைமைக்குழு, ஐந்து பேர் கொண்ட வழிகாட்டுக் குழு மற்றும் ஐந்து பேர் கொண்ட தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டன. 21 மாநிலங்களில்






இருந்து மொத்தம் 876 பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் மாநாட்டில் பங்கேற்றனர். இவர்களில் 50 பேர் பெண்கள்.

வரவேற்புக் குழுத் தலைவரான ஓய்வுபெற்ற IAS அதிகாரி கன்சிங் பன்னுவின் வரவேற்புரையுடன் அமர்வு தொடங்கியது. மோடி அரசின் வளர்ச்சி மாதிரியை அவர் கடுமையாக விமர்சித்தார். பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள், உலகை ஆதிக்கம் செலுத்துவதற்காக அனைத்து வழிகளையும் பயன்படுத்தி வரும் நிலையில், அனைத்து போராடும் அமைப்புகளும் மக்கள் சார்பு சக்திகளும் ஒன்றுபட்டு, இந்தச் சுரண்டல்காரர்களை எதிர்கொள்ள தங்களது கூட்டு சக்தியை கணிசமாக வலுப்படுத்துவது முக்கியம் என்றும் அவர் கூறினார்.

அதன்பின், AIKM பொதுச் செயலாளர் தோழர் ராஜா ராம் சிங் அரசியல்-அமைப்பு அறிக்கையை விவாதத்திற்காக முன்வைத்தார்.

அரசியல்-அமைப்பு அறிக்கை மீதான விவாதம் இரண்டாவது நாள் வரை மூன்று அமர்வுகளில் தொடர்ந்தது. பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 61 பிரதிநிதிகள் விவாதங்களில் பங்கேற்றனர். பல்வேறு ஆலோசனைகளுடன் அறிக்கை ஏகமனதாக ஏற்கப்பட்டது.

மாநாடு 153 உறுப்பினர்களைக் கொண்ட தேசியக் குழுவை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தது. ( தமிழ்நாட்டில் இருந்து தேசிய கவுன்சில் உறுப்பினர்களாக தோழர்கள் சந்திரமோகன்,அய்யந்துரை,அருணாச்சலம்,ராஜாங்கம் மற்றும் தாளாண்மை உழவர் இயக்கத் தலைவர் திருநாவுக்கரசு தேர்வு செய்யப்பட்டனர்)

அதனைத் தொடர்ந்து, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசியக் குழு, 57 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுத்தது. (தமிழ்நாட்டில் இருந்து தோழர்கள் சந்திரமோகன் மற்றும் அருணாச்சலம் தேசிய செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.)

தேசிய நிர்வாகக் குழு ஒருமனதாக, தோழர் டாக்டர் சத்னம் சிங் அஜ்னாலா அவர்களை அகில இந்தியத் தலைவர் ஆகவும், தோழர் புருஷோத்தம் சர்மா அவர்களை தேசியப் பொதுச் செயலாளர் ஆகவும் தேர்ந்தெடுத்தது. முன்னாள் தேசியத் தலைவர் தோழர் ருல்துசிங் மான்சா, கௌரவ உறுப்பினராக தேசிய நிர்வாகக் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளார். முன்னாள் பொதுச் செயலாளர் தோழர் ராஜாராம் சிங், புரவலராக (*Patron*) நியமிக்கப்பட்டுள்ளார்.

**—சந்திரமோகன்**

# யுபிஐ வரி: இந்திய மக்கள் மீது மோடியின் பிறந்தநாள் தாக்குதல்

நீண்ட காலம் ஆட்சியிலிருக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி என்று 'சாதனை' கொண்டாட்டம் நடத்தி வெறும் மூன்று மாதங்களுக்குள்ளாகவே, மோடி அரசாங்கமும் பாஜக தலைமையிலான பல்வேறு மாநில அரசாங்கங்களும், ஒட்டுமொத்த சங்-பாஜக அமைப்பும் மோடியின் 76வது பிறந்தநாளை பிரம்மாண்டமான நாடு தழுவிய கொண்டாட்டமாக நடத்துகின்றன. அதிகார மமதையையும் தனிநபர் துதியையும் அரசு ஆதரவுடன் இவ்வளவு கொச்சையாகவும் அப்பட்டமாகவும் திணிக்கப்படும் இதுபோன்றதொரு கொண்டாட்டத்தை இதற்கு முன்பு இந்தியா ஒருபோதும் கண்டதில்லை. மோடியின் பிறந்தநாளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் விளக்கேற்ற மக்களைக் கட்டாயப்படுத்துவதற்காக, பெருமளவு பொதுப்பணம் செலவிடப்பட்டது. அரசு நிறுவனங்களின் நடைமுறைகளும் சாத்தியமான அனைத்து வழிகளிலும் தவறாகப் பயன்படுத்தப்பட்டன. ஜம்மு ஐஐஎம்-மில், இந்நிகழ்வில் பங்கேற்காத மாணவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கட்டாயப்படுத்தும் நடவடிக்கைகளையும் தாண்டி, இந்த 'கண்கவர்காட்சி' படுதோல்வியடைந்தது. தனது படுதோல்வி, திறமையின்மை, அக்கறையின்மை காரணமாக மோடி அரசாங்கம் அனைத்துத் தளங்களிலும் மக்களின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டிருக்கிறது. நெருக்கடியிலிருக்கும் இந்த அரசாங்கத்தால் மக்கள் மீது திணிக்கப்பட்ட கொண்டாட்டத்திற்கு மக்களிடமிருந்து தன்னிச்சையான ஆதரவு கிடைப்பதற்கான வாய்ப்பே இல்லை. நாட்டின் பரந்த பகுதிகள் வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில், அதற்கு சில நாட்களுக்கு முன்பு தெற்கு டெல்லியில் பாதுகாப்பற்ற வாடகை விடுதிகளின் 'புறாக்கூண்டு'களில் அடைபட்டுக் கிடந்த மாணவர்கள் கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்திருந்த (இந்த சம்பவம் நகராட்சி நிர்வாகத்தின் முழுமையான தோல்வியாகவே பார்க்கப்பட வேண்டும்) பின்னணியில், உண்மையில், இந்த ஆட்சியின் கொண்டாட்ட நிகழ்ச்சிகள், இந்தியாவின் தற்போதைய இந்த யதார்த்தத்தையே கேலி செய்வது போல அமைந்திருந்தன.

பிரதமரின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு முன்னதாக, டெல்லியில் பிரிக்ஸ் நாடுகளின் 18வது உச்சிமாநாடு நடைபெற்றது. கடந்த சில ஆண்டுகளாக, இந்தியாவின் பிரிக்ஸ் பங்களிப்பு மிகவும் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மோடி ஆட்சிக்கால வெளியுறவுக் கொள்கை, அமெரிக்க-இஸ்ரேல் அச்சின் ஒரு துணை அமைப்பாக இந்தியாவை மாற்றிவிட்டது. அமெரிக்க-இஸ்ரேல் கூட்டு வான்வழித் தாக்குதலில் ஈரானின் உச்சத் தலைவர் குறிவைத்து படுகொலை செய்யப்பட்டபோது, இந்தியா தாமதமான, கட்டுப்பாடான இரங்கல் தெரிவித்தது. அதேவேளை, ஈரான் மீதான போர் குறித்தும் காசாவில் தொடர்ந்து பாலஸ்தீனியர்கள் இனப்படுகொலை செய்யப்படுவது குறித்தும் இந்தியா வெட்கக்கேடான வகையில் மௌனம் காக்கிறது. எனவே, உலகத் தலைவர்களுடனான தனது ஊதிப் பெரிதாக்கப்பட்ட 'தனிப்பட்ட உறவை' நரேந்திர மோடி வெளிப்படுத்திக் கொள்ளக் கிடைத்த மற்றுமொரு புகைப்பட வாய்ப்பு, உலக அமைதிக்கும் மனிதகுலத்திற்கும் தற்போது மிகப்பெரிய அச்சுறுத்தலாக விளங்கும் அமெரிக்க-இஸ்ரேல் போர்க்கூட்டணியை வெளிப்படையாகக் கண்டிக்காமல், ஐநா பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தம் குறித்து பேசிய, கவனமாகத் தயாரிக்கப்பட்ட 'ஒருமித்த கருத்து' கொண்ட பிரகடனம், இவை தவிர, புதுடெல்லியில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் சொல்லிக்கொள்ளும்படி எதுவுமில்லை.

இதற்கிடையில், மோடியின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே, ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்கும் விவகாரத்தில் அமெரிக்கா மீண்டும் இந்தியாவை அச்சுறுத்தியது; இம்முறை 100% வரை வரி விதிக்கப்படும் என்ற அச்சுறுத்தல் வந்தது. ரஷ்யாவுக்கு எதிராகத் தடைகளை விதிக்கவும் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய், எரிவாயு வாங்கும் நாடுகளுக்கு 100% வரை வரி விதிக்கவும் அதிபர் டொனால்ட் ட்ரம்புக்கு பரந்த அதிகாரங்களை வழங்கும் வகையில் அமெரிக்க பிரதிநிதிகள் சபை நிறைவேற்றிய மசோதா மூலம் இந்த அச்சுறுத்தல் வந்தது. இந்த வரி அச்சுறுத்தலுக்கு பதிலளிக்கும் வகையில், மோடி அரசாங்கம் இந்தியாவின் 'சுதந்திர வெளியுறவுக் கொள்கையை' சுட்டிக்காட்டி முறையாகப் பதிலளித்துள்ளது. ஆனால், வார்த்தைகளைவிட செயல்களே உரத்துப் பேசுகின்றன. அந்த வகையில் பார்த்தால், அரசாங்கம் மீண்டும் ஒருமுறை அமெரிக்க அழுத்தத்திற்கு பணிந்துள்ளது.

அமெரிக்க நிர்ப்பந்தத்துக்கு மோடி அரசு அடிபணிந்ததை அப்பட்டமாக சுட்டிக்காட்ட, மோடி அரசாங்கத்தின் அண்மைய வழிப்பறி வரி (யுபிஐ) உத்தரவைவிட, வேறெந்த உதாரணமும் தேவையில்லை. புதுடெல்லியில் பிரிக்ஸ் உச்சிமாநாடு முடிவடைந்த உடனே, மோடியின் பிறந்தநாளையொட்டி விளக்கேற்றும் நிகழ்ச்சிக்கு முன்னதாக, இந்தியாவின் மிகவும் பிரபலமான டிஜிட்டல் பணப்பரிமாற்ற தளமான, ஒருங்கிணைந்த பணப்பரிமாற்ற முறை (யுபிஐ) மூலம் ₹2,000-க்கும் அதிகமாக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு வணிகப் பரிவர்த்தனைக்கும் 0.4% வரி விதிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது. இந்த வரி, 'தள்ளுபடி விகிதம்' என்றும் அதுவும் 'வணிகர்களுக்கு' மட்டுமே என்றும் மூடிமறைக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த 'தள்ளுபடி' என்பது ₹2,000-க்கும் குறைவான பரிமாற்றங்களுக்கான வரம்பை மட்டும்தான் குறிக்கிறது; அவற்றுக்கு இப்போது எந்தக் கட்டணமும் கிடையாது. மேலும் 'வணிகர்' என்பது இங்கு நுகர்வோர் என்பதற்கான சங்கேத வார்த்தையாகும்; ஏனெனில் எந்தவொரு வணிகரும் இந்தச் சுமையை வாங்குபவரின் மீது சுமத்தாமல் தாமே ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

இந்தியாவின் இலவச யுபிஐ பணப்பரிமாற்ற முறையைப் பற்றி அமெரிக்காவின் முன்னணி கடனட்டை

நிறுவனங்களான மாஸ்டர்கார்ட், விசா ஆகியன நீண்ட காலமாகப் புகார் தெரிவித்து வருவது அனைவரும் அறிந்ததே. பேரழிவை ஏற்படுத்திய பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு, ஏப்ரல் 2016–ல் யுபிஜ முறையை மோடி அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. அது படிப்படியாக இந்தியாவில் நேரடிப் பணப் பரிவர்த்தனைக்கு மிகப்பெரிய மாற்று முறையாக மாறியது.

பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் ஏற்பட்ட மாபெரும் சீர்குலைவின் சுமையை சாமானிய மக்களும் சிறு, குறு, நடுத்தரத் தொழில் துறையினரும் சுமக்க வேண்டியிருந்தது. ஆனால், அதிக மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளைத் திரும்பப் பெற்றதன் மூலம் கருப்புப் பண ஒழிப்பில் எந்தவொரு தாக்கமும் ஏற்படவில்லை. உண்மையில், பணமதிப்பிழப்பு நடவடிக்கையின் காணத்தக்க ஒரே நீண்டகால விளைவு, பணப் பயன்பாட்டுக்கு மாற்றாக இந்தியாவில் யுபிஜ ஒரு இயல்பான வழியாக உருவெடுத்தது மட்டும்தான். மோடி அரசாங்கத்தைப் பொறுத்தவரை, டிஜிட்டல் இந்தியாவின் மிகப்பெரிய 'தற்சார்பு' வெற்றிக் கதையாக யுபிஜ இருந்தது. தற்போது, நடைபெற்றுக் கொண்டிருக்கும் அமெரிக்காவுடனான இந்தியாவின் வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளுக்கான முன்நிபந்தனையாக யுபிஜ மீது இந்த வரி விதிக்கப்பட்டுள்ளது என பரவலாகக் கருதப்படுகிறது. யுபிஜ பயன்பாட்டை அரசாங்கமே ஊக்கமிழக்கச் செய்து, மீண்டும் பணப் பயன்பாட்டை ஊக்குவிக்கத் தொடங்கும்.

பணமதிப்பிழப்பு நடவடிக்கை என்பது மோடி அரசாங்கம் முதன்முதலில் செயல்படுத்திய 'அதிர்ச்சி வைத்தியம்' ஆகும். 2017 உத்தரப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலுக்கு சற்று முன்பு அறிவிக்கப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கை, பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அந்த மாநிலத்தில் பாஜக மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு முக்கிய பங்காற்றியது. பணமதிப்பிழப்பு நடவடிக்கை, ஜிஎஸ்டி, முழுமுடக்கம் முதல் எஸ்ஐஆர், தற்போது யுபிஜ வரி வரையிலும் மோடி காலம் இந்திய மக்களுக்கு தொடர்ச்சியான அதிர்ச்சிகளைக் கொண்ட காலமாக அமைந்துள்ளது. ஆனால், மோடி காலம் இந்தியாவின் மிகவும் நினைவுகூரத்தக்க, வலிமையான சில போராட்ட இயக்கங்களுக்கும் சாட்சியாக இருந்துள்ளது. பிரிவினைவாத, பாரபட்சமான குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான ஷாஹீன் பாக் போராட்டம், இந்திய வேளாண்மையை கார்ப்பரேட்டுகள் கையகப்படுத்துவதற்கு வழிவகுக்கும் சட்டங்களுக்கு எதிரான வரலாற்றுச் சிறப்புமிக்க விவசாயிகள் போராட்டம், கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை நீக்குவதற்கு மோடி அரசாங்கத்தை நிர்ப்பந்தித்த சில நாட்களுக்கு முன்னர் ஜந்தர் மந்தரில் நடைபெற்ற முன்னெப்போதும் இல்லாத ஜென் ஷீ தலைமுறையின் எழுச்சி ஆகியவை இதில் அடங்கும். எஸ்ஐஆர் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தவும் யுபிஜ வரியைத் திரும்பப் பெறச் செய்யவும் அதே அளவிலான ஒற்றுமையுடனும் உறுதியுடனும் இந்தியா மீண்டும் ஒருமுறை எழுந்து நிற்க முடியாதா? ❑

**எம்எல் அப்டேட், தலையங்கம்,**
**22 – 28 செப்டம்பர் 2026**
**தமிழாக்கம்: விஜி**

# ஞானேஷ் குமார் வெளியேற்றப்பட வேண்டும்



ஜூன் 2025 – இல் பீகார் தேர்தல்களுக்கு முன்னதாக இந்திய தேர்தல் ஆணையத்தால் தொடங்கப்பட்ட வாக்காளர் பட்டியலின் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) தற்போது முழுமையாக அம்பலப்பட்டு நிற்கிறது. அது, பெரும் எண்ணிக்கையில் வாக்குரிமை பறிப்பு, பல அடுக்கு தேர்தல் மோசடிக்கான ஒரு கருவியாகியுள்ளது. வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை, சுதந்திரமான, நியாயமான தேர்தல்கள் என்ற அடிப்படை அரசமைப்புச்சட்ட வாக்குறுதியின் மீது — இந்திய தேர்தல் ஜனநாயக அச்சாணியின் மீது — இந்தியத் தேர்தல் ஆணையம் நடத்திய இந்தத் துல்லியத் தாக்குதல், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் நம்பகத்தன்மையை சிதைத்துவிட்டது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் சந்தேகத்திற்குரிய இருண்ட செயல்பாடுகள் குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் வெளியிட்ட கொந்தளிப்புதரத்தக்க புலனாய்வு அறிக்கையும் அதற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் அளித்த விளக்கங்களும் இந்த அரசமைப்புச்சட்ட நிறுவனத்திற்குள் நிலவும் அதிர்ச்சிகரமான சீர்குலைவையே உறுதிப்படுத்தியுள்ளன. இதுநாள்வரை தலையிட மறுத்து, இந்தியத் தேர்தல் ஆணையம் தன்னிச்சையாக செயல்பட சுதந்திரம் வழங்கிய இந்திய உச்ச நீதிமன்றத்தின் மீதும் சந்தேக நிழல் படர்ந்துள்ளது. 1975 – ஆம் ஆண்டு அவசரநிலை பிரகடனத்திற்குப் பிறகு மிக மோசமான அரசமைப்புச்சட்ட நெருக்கடியை இந்தியா இப்போது எதிர்கொள்கிறது.

நடுநிலையான தேர்தல் ஆணையம் என்ற கருத்தின் இதயத்தில் பேரிடியை இறக்கியது தேர்தல் ஆணையர்களை நியமிக்கும் 2023 ஆம் ஆண்டின் சட்டத் திருத்தம். அதிலிருந்துதான் இந்தக் கேடு தொடங்கியது. தனக்கு அடிபணிந்து சேவையாற்றும் தேர்தல்ஆணையத்தைத் தேர்ந்தெடுக்க அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்ட சுதந்திரமும், தேர்தல் ஆணையர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுள் முழுவதற்குமான நீதித்துறை பாதுகாப்பும், அரசாங்கத்திற்கும் இந்தியத் தேர்தல்

ஆணையத்திற்கும் இடையிலான ஒரு தீய, கள்ளக் கூட்டணியை உறுதிப்படுத்தியது. அதன் மூலம், தனது நடுநிலைமை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு ஆகியவற்றின் ஒவ்வொரு சாயலையும் இந்தியத் தேர்தல் ஆணையம், பிஜேபி–க்கு சாதகமாக கைவிட்டது. பிஜேபி–யோ தலைமைத் தேர்தல் ஆணையரை முழுமையாக பாதுகாத்தது. தலைமைத் தேர்தல் ஆணையர் ஒருதலைப்பட்சமாக செயல்பட்டு வந்தார் என்பதையும் நிகழ்ச்சி நிரல், விவாதக் குறிப்புகள் எதுவும் முறையாகப் பதிவு செய்யப்படாமல், கூட்டங்கள் முறைப்படி நடத்தப்படவில்லை என்பதையும் இந்தியத் தேர்தல் ஆணைய குறிப்பு இப்போது ஒப்புக்கொண்டுள்ளதால், எஸ்ஐஆர் என்ற பெயரில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு எந்த சட்டபூர்வ அங்கீகாரமும் இல்லை. இயல்பாகவே, தன்னிச்சையான, ஒளிவுமறைவான முறையில் செயல்படும் ஒரு தேர்தல் ஆணையத்தால் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் நடத்தப்பட்ட தேர்தல்கள், நம்பகத்தன்மையையும் சட்ட அங்கீகாரத்தையும் இழந்துவிட்டன.




உச்ச நீதிமன்றத்தின் பங்கும் அதிர்ச்சிகரமான வகையில் பொறுப்பற்றதாகவே இருந்து வருகிறது; வாக்காளர்களின் மோசமாக பாதிக்கப்பட்ட வாக்குரிமை மீது நீதிமன்றம் எந்த அக்கறையையும் காட்டவில்லை. மேற்கு வங்கத்தில், நீதித்துறை அதிகாரிகளால் தகுதியுடையவர்களாகக் கருதப்பட்ட இலட்சக்கணக்கான வாக்காளர்களின் முறையீடுகள் தீர்ப்பாயங்களுக்கு அனுப்பப்பட்டது. அந்த மேல்முறையீடுகளைத் தீர்ப்பாயங்கள் தீர்ப்பதற்கு பல்லாண்டுகள் ஆகும் என்பது தெளிவாகியபோதும் மேல்முறையீடுகள் நிலுவையில் இருக்கும் காலத்தில் வாக்காளர்களின் வாக்குரிமையை நிலைநாட்டுவதற்குப் பதிலாக, இது வெறும் தற்காலிக உரிமை இழப்பு தான் என்றுகூறி வாக்கும றுப்பின் பாதகத்தை உச்சநீதிமன்றம் குறைத்து கூறியது. வரவிருக்கும் நந்திகிராம், ரெஜிநகர் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களுக்கு முன்னதாக, தீர்ப்பாயங்களில் மேல்முறையீடுகள் நிலுவையில் உள்ள 18,000க்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்படுவதை, இடைத்தேர்தலில் வாக்களிக்கும் உரிமை இன்றியமையாததல்ல என சொல்லி, உச்ச நீதிமன்றம் வாக்குரிமையை மீண்டும் சிறுமைப்படுத்திவிட்டது.

இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் அம்பலமாக்கிய தகவல்களின் வெளிச்சத்திலும் தேர்தல் ஆணையம் தனது சொந்த செப்டம்பர் 26 செய்திக் குறிப்பின் மூலம் தனது குற்றத்தை திறன்மிக்க வகையில் ஒப்புக்கொண்டதாலும், ஞானேஷ் குமார், தான் தலைமைத் தேர்தல் ஆணையராக தொடர்வதற்கான அனைத்து உரிமைகளையும் இழந்துவிட்டார். அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும், இந்திய அரசமைப்பையும் தேர்தல் அமைப்பையும் சீர்குலைத்த குற்றத்திற்காக அவர்மீது வழக்கு தொடர வேண்டும் என்ற கோரிக்கை இப்போது நாட்டின் அனைத்து மூலைகளிலிருந்தும் இயல்பாகவே எழுப்பப்படுகிறது. எஸ்ஐஆர் ரத்து செய்யப்பட வேண்டும்; அதனால் ஏற்பட்ட சேதம் சரிசெய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அதற்கிணையாக அவசரமானதாகும். தவறாக நீக்கப்பட்ட ஒவ்வொரு வாக்காளரின் வாக்களிக்கும் உரிமையும் எவ்விதத் தாமதமுமின்றி, எந்த நிபந்தனையுமின்றி உடனடியாக திரும்ப வழங்கப்பட வேண்டும். வாக்குப் பதிவு அதிகாரிகளின் உரிமைகளும் திரும்ப வழங்கப்பட வேண்டும். மேலும் டிஜிட்டல் வழிமுறை மூலம் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் செயல்பாட்டில் திணிக்கப்பட்ட மத்தியத்துவப்படுத்தல் ரத்து செய்யப்பட வேண்டும்.

2024 மக்களவைத் தேர்தல்களுக்குப் பிறகு, எஸ்ஐஆர் மற்றும் சந்தேகத்திற்குரிய வகையில் தேர்தல் பட்டியலில் செய்யப்பட்ட மாற்றங்களால் தேர்தல் முடிவுகள் சிதைக்கப்பட்ட அனைத்து மாநிலங்களிலும் தொகுதிகளிலும் தேர்தல்கள் புதிதாக நடத்தப்பட வேண்டும் என்பது ஜனநாயகத்தின் கோரிக்கை. தேர்தல் ஆணையர்களின் நியமனம் தொடர்பான 2023 ஆம் ஆண்டின் சட்டம், தேர்தல் ஆணையர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உள்ளிட்ட விதிகளுடன் சேர்த்து ரத்து செய்யப்பட வேண்டும். தேர்தல் ஆணையம் தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு இணங்க, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தன்னாட்சி, நடுநிலைமை, பொறுப்புணர்வுக்கு அரசமைப்பு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். தேர்தல் மோசடியை விட பெரிய ஊழல் வேறெதுவுமில்லை. தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற பயம் இல்லாததாலும் மக்களின் ஒவ்வொரு மனக்குறை, கோபம், எதிர்ப்புகளிலிருந்தும் பாதுகாப்பாக விலகி இருப்பதாலும் பிஜேபி அரசாங்கங்கள் மேலும் மேலும் அதிக ஆணவமும் சர்வாதிகாரமும் கொண்டவையாக மாறிவிட்டன. மோடி–ஷா–ஞானேஷ் குமார் கூட்டணியால் ஜனநாயகம் சிதைக்கப்படுவதை முடிவுக்குக் கொண்டுவர இந்தியா ஒன்றிணைந்து எழ வேண்டும்.❑

# அமெரிக்க புலம்பெயர் சமூகத்தில் இந்துத்துவத்துக்கு எதிரான போராட்டம்!

**நியூயார்க் நகரில் மோகன் பகவத். அமெரிக்காவில் ஆர்.எஸ்.எஸ்-இன் கட்டமைப்பு. அதற்கு எதிரான போராட்ட ஒருங்கிணைப்பு - சலாம் (தெற்காசிய இடதுசாரி அமைப்பு)**

ஆகஸ்ட் 29 அன்று, நியூயார்க் நகரில் உள்ள ‘உலகின் மிகவும் புகழ்பெற்ற அரங்கம்’, ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்தை வரவேற்று உபசரித்தது. இதே மேடிசன் ஸ்கொயர் பூங்காவில் தான் பிப்ரவரி 1939–இல் நாஜி ”ஸ்வஸ்திகா” கொடிகளுக்கு நடுவே ‘ஜெர்மன் அமெரிக்கன் பண்ட்’ (பிரிட்ஸ் ஜூலியஸ் குன் என்பவரால் வழிநடத்தப்பட்ட, ஜெர்மானிய வம்சாவளியினரைக் கொண்ட ஓர் அமெரிக்க நாஜி அமைப்பு) அமைப்பின் பேரணியும் நடந்தது. இம்முறை, இந்திய–அமெரிக்க மேல்தட்டு வர்க்க செல்வந்தர்களின் நிதி ஆதரவோடு, “உலகளாவிய ஒருமைப்பாடு” குறித்து பகவத் பேசுவதைக் கேட்பதற்காக ஐயாயிரம் பேர் அந்த அரங்கில் திரண்டிருந்தனர். இக்கூட்டத்தை AHEAD (சமூகப் பங்கேற்பு மற்றும் கலந்துரையாடலுக்கான அமெரிக்க இந்துக்கள் அமைப்பு) என்ற குழு ஏற்பாடு செய்திருந்தது. நெருக்கமான புலம்பெயர் கட்டமைப்புகளான இந்துக் கோயில்கள் மற்றும் சமூக மையங்கள் மூலம் ஆயிரக்கணக்கானோர் திரட்டப்பட்டு பேருந்துகளில் அரங்கிற்கு அழைத்து வரப்பட்டனர். பறை முழக்கங்களும் நடனமும் நிறைந்த இந்நிகழ்ச்சி, பின்னர் ரபிகள் (யூத மதகுருக்கள்) மற்றும் இமாம்களுக்கு மத்தியில் பகவத்தை அமர வைத்த ஒரு ‘மதநல்லிணக்க’ உச்சிமாநாடாக மாறியது. பின்னர் அவர் “வேற்றுமையில் ஒற்றுமை” குறித்து நாற்பது நிமிட நீண்ட உரையை ஆற்றினார்; இதன் மூலம் ஆர்.எஸ்.எஸ். தலைவரை மையமாகக் கொண்ட ஒரு பன்மைத்துவ வேடம் பூணும் நிகழ்வாக அந்தப் பிற்பகல் நிறைவடைந்தது.




அரங்கிற்கு வெளியே, அந்தப் போலி முகமூடி உடைந்து நொறுங்கியது. சலாம் (தெற்காசிய இடதுசாரி) அமைப்பும் அதன் தோழமை அமைப்புகளான இடதுசாரிகள், தலித்துகள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், சாதி எதிர்ப்பு அமைப்புகள், ‘முற்போக்கு’ இந்துக்கள் மற்றும் பாலஸ்தீன ஆதரவு அமைப்புகளால் திரட்டப்பட்ட 250–க்கும் மேற்பட்டோர், இந்த நிகழ்வுக்கு எதிராகவும் அதற்குத் தலைமை தாங்கிய மோகன் பகவத்துக்கு எதிராகவும் மேடிசன் ஸ்கொயர் கார்டனின் நுழைவாயிலில் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அரங்கை நிரப்புவதற்காக ஆர்.எஸ்.எஸ் ”பன்முகக் கலாச்சாரம்” என்ற பதத்தை பயன்படுத்தியிருந்தது; ஆர்.எஸ்.எஸ் என்றால் என்னவென்று தங்களுக்கு முன்பே தெரிந்திருந்தால் இதில் பங்கேற்றிருக்க மாட்டோம் என்றும், பகவத்துடன் மேடையைப் பகிரும் வகையில் தாங்கள் தவறாக வழிநடத்தப்பட்டோம் என்றும் அமெரிக்காவின் பல மதத் தலைவர்கள் பின்னர் கருத்து தெரிவித்தனர். போராட்டக்காரர்கள் இந்துத்துவத்தின் உண்மை முகத்தை, அதாவது, இந்துத்துவா என்பது சுரண்டப்படும் மக்களின் அதிகார வர்க்கத்திற்கு எதிரான கோபத்தை, சக ஒடுக்கப்பட்ட மக்கள் மீது திசைதிருப்பக்கூடிய, சுரண்டலை தீவிரப்படுத்தக் கூடிய, ஆக்கிரமிப்பு மற்றும் சாதி ஆதிக்கத்தின் ஒரு திட்டம் என்பதை அம்பலப்படுத்தினர்.

அமெரிக்காவில் அதிக வருமானம் ஈட்டும் இனக்குழுவாக அமெரிக்க வாழ் இந்தியர்கள் உள்ளனர். இந்தப் புலம்பெயர் சமூகத்தின் ஒரு பிரிவினர், தொழில்துறை மற்றும் சமூக வாழ்வில் ஆர்.எஸ்.எஸ்–உடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள். அவர்கள் அதிக வளங்களையும் கட்டமைப்பு அமைப்புகளையும் கொண்ட ஒரு வலைப்பின்னலை உருவாக்கியுள்ளனர். ஆர்.எஸ்.எஸ்–இன் சர்வதேசப் பிரிவான ‘விஸ்வ விபாக்’கின் நிதி மற்றும் அரசியல் செயல்தந்திர தலைமை மையமாக அமெரிக்கா விளங்குகிறது. ஆர்.எஸ்.எஸ் எந்தவொரு உறுப்பினர் பதிவேடும் இல்லாத, பதிவு செய்யப்படாத ஓர் அமைப்பாகச் செயல்படுகிறது; ஆட்களைச் சேர்த்தல், நிதி திரட்டுதல், அரசியல் ஆதரவு மற்றும் லாபி செய்தல், மற்றும் இவை அனைத்திற்கும் அடித்தளமாக அமையும் பள்ளி நேரத்திற்குப் பிந்தைய நிகழ்ச்சிகள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் ஆகிய பணிகளை செய்து வருகிறது. வரிவிலக்கு பெற்ற அறக்கட்டளைகள் மற்றும் சங்கங்களைக் கொண்ட ஓர் அமெரிக்கக் கட்டமைப்பின் மூலமாகவே அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தக் கட்டமைப்பின் தலைமையாக ‘இந்து சுயம்சேவக் சங்கம்’ (HSS) உள்ளது; இது அமெரிக்காவின் 33 மாகாணங்களில் 267 ஷாக்காக்களை நடத்துகிறது, இது இந்தியாவிற்கு வெளியே உள்ள மொத்த ஆர்.எஸ்.எஸ் கிளைகளில் தோராயமாக ஆறில் ஒரு பங்காகும். இதனுடன் இணைந்து விஷ்வ இந்து பரிஷத்தின் அமெரிக்கப் பிரிவான வி.எச்.பி.ஏ (VHPA) செயல்படுகிறது.

“பழங்குடியினர் கல்வி” மற்றும் “பேரிடர் நிவாரணம்” என்ற போர்வையில் ஆர்.எஸ்.எஸ்–க்கு

பணத்தை மடைமாற்றும் 'ஏகல் வித்யாலயா' மற்றும் 'சேவா இன்டர்நேஷனல்' போன்ற பினாமி அமைப்புகளை அவர்கள் நடத்துகின்றனர். இந்திய–அமெரிக்கத் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் மருத்துவர்களின் உழைப்பிலிருந்து வரும் பணம், இனப்படுகொலைகளுக்கான உள்கட்டமைப்புகளுக்கு நிதி அளிப்பதற்காக, அந்த அமைப்புகள் மூலமாகத் திருப்பிவிடப்படுகிறது. ஏகல் அமைப்புக்கு அனுப்பப்படும் பணம், மத்திய இந்தியாவில் ஒற்றை ஆசிரியர் பள்ளிகளை உருவாக்குகிறது; இது ஆதிவாசி இளைஞர்களை அவர்களின் பூர்வகுடி கலாச்சாரத்திலிருந்து பிரித்து, பிராமணிய இந்து வலைபின்னலுக்குள் கொண்டுவருவதற்கும், அவர்களைத் தங்களின் காலாட்படை வீரர்களாக வளர்ப்பதற்குமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்களை, தலித்துகளைக் கூட்டாக படுகொலை செய்தல், தேவாலயங்களை எரித்தல், உழைக்கும் வர்க்க மக்களின் குடியிருப்புகளை புல்டோசர் மூலம் இடித்தல் ஆகியவற்றின் பின்னணியில் உள்ள பஜ்ரங் தளம் மற்றும் வி.எச்.பி அமைப்புகளுக்கு 'சேவா' அமைப்பு நிதியளிக்கிறது. புலம்பெயர்ந்தோரின் டாலர்கள்தான் இந்த ஆர். எஸ். எஸ் கர சேவகர்களை வளர்க்கின்றன.

அமெரிக்க சங் பரிவார், இந்த ஏகாதிபத்திய அதிகார மையத்தில் தனது ஆதிக்கத்தைக் கட்டமைப்பதில் முதலீடு செய்துள்ளது. இதன் கட்டமைப்பு, குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக்கட்சி ஆகிய இரு கட்சிகளுக்கும் தேர்தல் பிரச்சார நிதியளிக்கிறது. உள்ளாட்சி அமைப்புகள் தொடங்கி தேசிய அளவு வரையிலான அதிகாரிகளிடம் ஆதரவு திரட்டுகிறது, மேலும் தாராளவாத குடிமைச் சமூகக் குழுக்களுடன் பிணைப்பை உருவாக்குகிறது. வாஷிங்டனில் ஆதரவு திரட்டுவதற்காக பல்லாயிரக்கணக்கான டாலர்களைச் செலவழித்துள்ள 'இந்து அமெரிக்கன் பவுண்டேஷன்' (HAF), பாஜகவின் இராஜதந்திர கேடயமாகச் செயல்படுகிறது; அதே நேரத்தில் 'இந்து யுவா' போன்ற கல்லூரி வளாக அமைப்புகள் அடுத்த தலைமுறை புலம்பெயர் மேல்தட்டு வர்க்கத்தை உருவாக்குகின்றன. HSS ஆவணங்களில் ஆண்டுக்கு சுமார் 36 லட்சம் சம்பாதிக்கும் "யோகா பயிற்றுவிப்பாளர்" என்று பதிவு செய்யப்பட்ட சௌமித்ரா கோகலே போன்ற நபர்கள், உண்மையில், ஆர்.எஸ்.எஸ்–இன் வெளிநாட்டுப் பிரிவின் உலகளாவிய ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டு வருகின்றனர். உலகம் முழுவதும் பயணம் செய்து சங்கத்தின் உயர்மட்டக் கூட்டங்களைக் கூட்டுகின்றனர். சௌமித்ரா கோகலே போன்ற நபர்களால்தான் இந்தக் கட்டமைப்பு ஒருங்கிணைக்கப்படுகிறது.

சங் பரிவாருக்கு எதிரான எதிர்ப்பிற்கும் ஒரு நீண்ட வரலாறு உண்டு. அது முற்போக்கு ஆதரவுச் செயல்பாடு, ஆராய்ச்சி மற்றும் தேசிய அளவில் ஆதரவு திரட்டும் முயற்சிகள் தொடங்கி, வட்டாரங்களிலும் நகரங்களிலும் பாசிச எதிர்ப்புத் தளங்களை உருவாக்குவது வரை பரந்து விரிந்துள்ளது. நியூயார்க்கில் நடந்த பகவத்தின் பேரணிக்குப் பிறகு, முற்போக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் 90 தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவர்களை அணுகி, ஆர்.எஸ்.எஸ் தொடர்புடைய நன்கொடைகளை நிராகரிக்குமாறு வலியுறுத்தின. சங்கத்தின் பரந்த கட்டமைப்பை வெளிப்படுத்துவது அவசியமானதுதான். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவர்களிடம் ஆதரவு திரட்டுவது பயனுள்ளதாக இருக்கும்தான். ஆனாலும், இந்த உத்திகள் மட்டுமே போதுமானவை அல்ல. இந்திய அரசாங்கத்தை நடத்திக்கொண்டே, புலம்பெயர் மக்கள் வாழும் நாடுகளில் ஆழமாக வேரூன்றி, பெரும் வளங்களுடனும் குறிப்பிடத்தக்க கட்டமைப்புடனும் இயங்கும் ஒரு மாபெரும் சக்தியை நாம் எதிர்கொள்கிறோம். அதை வீழ்த்துவதற்கு அதன் நிறுவனப் போர்வைகளை அம்பலப்படுத்துவதும், பணியிடங்கள், சமூக மையங்கள் மற்றும் புலம்பெயர் மக்களின் அன்றாட சமூக நிகழ்வுகளில் அதற்கு எதிராக மக்களைத் திரட்டுவதும் அவசியமாகும். எடுத்துக்காட்டாக, நியூயார்க் மாகாண அரசியல்வாதியும் சட்டமன்ற உறுப்பினருமான ஜெனிஃபர் ராஜ்குமார் இந்துத்துவ சார்புடைய நன்கொடையாளர்களுடனும் ஆதரவுக் கொள்கைகளுடனும் கொண்டிருந்த நெருக்கமான தொடர்பின் காரணமாக, அவரைத் தோற்கடிக்க DRUM Beats–இன் (நியூயார்க் நகரில் வசிக்கும் தெற்காசிய மற்றும் இந்தோ–கரீபியன் வம்சாவளியைச் சேர்ந்த உழைக்கும் வர்க்க மக்களை ஒருங்கிணைக்கும் அமைப்பாகும்) உழைக்கும் வர்க்க தெற்காசிய உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இந்த ஆண்டு ஒருங்கிணைந்து செயல்பட்டனர்.

கொண்டாடப்படும் "இந்திய அமெரிக்கர்களின் வெற்றிக் கதை" என்பது புலம்பெயர்ந்தோரின் விடாமுயற்சியால் உருவான செல்வத்தை சார்ந்ததல்ல. பல நூற்றாண்டுகளாக நிலங்களை அபகரித்த பிராமணிய ஆதிக்கம், கல்வி ஏகபோகம் மற்றும் ஒடுக்கப்பட்ட சாதி மக்களது உழைப்புச் சுரண்டல் ஆகியவற்றை உலகளாவிய தொழில்நுட்ப மூலதனமாக மாற்றியதை சார்ந்தது. நியூ ஜெர்சியின் ராபின்ஸ்வில்லில் உள்ள BAPS கோயில் வளாகம் (நியூ ஜெர்சி மாகாணத்தில் உள்ள ராபின்ஸ்வில்லில் அமைந்துள்ள பிரம்மாண்டமான அக்சர்தாம் கோயிலைக் குறிக்கிறது) இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்தக் கோயில் வளாகத்திற்கு எதிராக அமெரிக்காவில் தொடரப்பட்ட ஒரு தேசிய வழக்கு, இந்தியாவில் இருந்து விளிம்புநிலைச் சாதியைச் சேர்ந்த கல் செதுக்கும் தொழிலாளர்கள் கொடூரமாகக் கடத்தி வரப்பட்டதை அம்பலப்படுத்தியது. இந்தியாவிற்கு வெளியே உள்ள மிகப்பெரிய நவீன இந்துக் கோயிலைக் கட்டுவதற்காக, அத்தொழிலாளர்களின் பாஸ்போர்ட்டுகள் பறிக்கப்பட்டு, காவலாளிகள் உள்ள வளாகங்களுக்குள் அடைக்கப்பட்டு, வாரத்தில் ஏழு நாட்களும் ஒரு நாளைக்கு பன்னிரண்டு மணி நேரத்திற்கும் மேலாக, வெறும் 120 ரூபாய் கூலிக்கு அவர்கள் கட்டாய வேலை வாங்கப்பட்டதை அம்பலப்படுத்தியது. சட்டங்கள், பள்ளிகள் குறித்த விசயத்திலும் இதே அரசியல் தான் காணப்படுகிறது. சாதிப் பாகுபாட்டிற்கு எதிரான பாதுகாப்புச் சட்டங்களைத் தோற்கடிக்கவும் (கலிபோர்னியாவின் SB 403 மற்றும் பிற மாகாணங்களின் மசோதாக்கள்), பள்ளிப் பாடப்புத்தகங்களிலிருந்து சாதி பற்றிய குறிப்புகளை நீக்கவும் HAF முயன்றபோது, அது "இந்துஃபோபியா" (இந்து வெறுப்பு) என்ற சொல்லாடலை ஆயுதமாகப் பயன்படுத்தியது. ஆதிக்க சாதிகளை சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப வைப்பதற்கும், விளிம்புநிலை மக்களின் உழைப்பைச் சுரண்டுவதைப் பாதுகாப்பதற்கும், சிலிக்கான் பள்ளத்தாக்கில் பணியிட நிறவெறி போன்றதொரு

பாகுபாட்டைத் திணிப்பதற்குமான ஒரு திட்டமிட்ட நடவடிக்கையே இதுவாகும்.

மேடிசன் ஸ்கொயர் கார்டனுக்கு வெளியே தெற்காசியக் குழுக்களுடன் துணைநின்ற பாலஸ்தீன அமைப்பாளர்கள் வெறுமனே அடையாளத்திற்காக ஆதரவு தெரிவிக்கவில்லை; ஒரே நேரத்தில் சித்தாந்த ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பிணைந்துள்ள ஓர் உண்மையான உறவை அவர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். இந்துத்துவமும் சீயோனிசமும் தங்களின் உறவை ஒரு சித்தாந்தக் கற்பனையாகத் தொடங்கி, பின்னர் ஒரு உறுதியான நடைமுறைக் கூட்டணியாக மாற்றிக்கொண்ட வரலாற்றைப் பகிர்ந்து கொள்கின்றன. இஸ்ரேலின் ஆயுதத் தொழில்துறையின் மிகப்பெரிய தனி வாடிக்கையாளராக இந்தியா உள்ளது; மேலும் இந்திய மற்றும் இஸ்ரேலிய நிறுவனங்கள் இந்திய மண்ணிலேயே அந்த ஆயுதங்களை அதிகளவில் இணைந்து உற்பத்தி செய்கின்றன. காஷ்மீரில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக் கட்டமைப்பை இந்திய அரசு எவ்வாறு ஆராய்ந்து நடைமுறைப்படுத்தியது என்பதை ஆய்வாளர்கள் ஆவணப்படுத்தியுள்ளனர். அமெரிக்காவில் உள்ள இந்துத்துவ ஆதரவு வலைப்பின்னல், இஸ்ரேல் ஆதரவு அமைப்புகளைப் படித்தும் அவற்றுடன் கூட்டு சேர்ந்தும் தன்னை உருவாக்கிக்கொண்டது. யுஎஸ்–இந்தியா அரசியல் நடவடிக்கை குழு (2002), அமெரிக்க இஸ்ரேல் பொது விவகாரக் குழு (AIPAC) மற்றும் அமெரிக்க யூதக் குழுவின் நிறுவன மாதிரியை அப்படியே பின்பற்றுகிறது. ஸ்டீவ் பானனை கௌரவ இணைத் தலைவராகக் கொண்டு 2015–இல் தொடங்கப்பட்ட ‘ரிபப்ளிகன் இந்து கூட்டணி’, தன்னை “மிகவும் வெற்றிகரமான ரிபப்ளிகன் யூதக் கூட்டணியின் மாதிரியைக் கொண்டு உருவாக்கப்பட்டது” என்று அறிவித்துக் கொண்டது. 1993–ஆம் ஆண்டிலேயே, வாஷிங்டனின் அரசியல் அதிகார கட்டமைப்புக்குள் வழிநடத்துவதற்காக, பதவியில் இருந்த AIPAC சட்டமன்றத் தொடர்பாளரை ஓர் இந்திய–அமெரிக்க அரசியல் நடவடிக்கை குழு பணியமர்த்தியது.

புலம்பெயர் ஏகாதிபத்திய எதிர்ப்பு அமைப்புகள், இந்துத்துவத்திற்கு எதிரான போராட்டத்தை சீயோனிசத்திற்கு எதிரான அணிதிரட்டலுடன் மிக அதிகமாக இணைத்து வருகின்றன. அக்டோபர் 2024–இல் நியூயார்க்கில் சலாம் அமைப்பினால் தொடங்கப்பட்டு இருபதுக்கும் மேற்பட்ட அமைப்புகளால் ஆதரிக்கப்பட்ட “டாடா பை பை” பிரச்சாரம், ஆயுத உற்பத்தி (டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ்), கவச வாகனங்கள் (ஜாகுவார் லேண்ட் ரோவர்) மற்றும் இஸ்ரேலிய ராணுவத்திற்கான தகவல் தொழில்நுட்பம் மற்றும் கிளவுட் இணைய சேவைகள் (TCS) ஆகியவற்றின் மூலம் இஸ்ரேலின் போர் இயந்திரத்திற்கு ஆதரவளிக்கும் டாடா குழுமத்தை, நியூயார்க் நகர மாரத்தான் புரவலர் பொறுப்பில் இருந்து நீக்க கோருகிறது (TCS அதன் முதன்மை நிதி ஆதரவாளராக உள்ளது). பாசிசத்தை எதிர்ப்பது என்பது அதன் விநியோகச் சங்கிலிக்கு எதிராக மக்களைத் திரட்டுவதாகும் என்பதை இத்தகைய பிரச்சாரங்கள் வலியுறுத்துகின்றன: அதாவது அதற்கு ஆதரவளிக்கும் மூலதனம் (டாடா), அதைத் தாங்கி நிற்கும் ‘சமூக சேவை’ கட்டமைப்பு (ஆர்.எஸ்.எஸ்), மற்றும் அதை நிலைநிறுத்தும் புவிசார் அரசியல் (இந்தியா–இஸ்ரேல் கூட்டணி) ஆகியவற்றுக்கு எதிராகப் போராடுவதாகும்.

மோகன் பகவத் ஆர்.எஸ்.எஸ்–ஐ அமெரிக்காவிற்கு அறிமுகப்படுத்துவதற்காக நியூயார்க்கிற்கு வரவில்லை. அது ஏற்கனவே தன் வசப்படுத்திய அதன் பகுதிகளை ஆய்வு செய்வதற்கும் பலப்படுத்துவதற்குமே வந்தார். ஆனால் மேடிசன் ஸ்கொயர் பூங்காவிற்கு வெளியே வேறொன்று வெளிப்பட்டது: தங்களின் “சமூகத்தை” இவர்களிடம் ஒப்படைக்க மறுக்கும் ஓர் உழைக்கும் வர்க்க, ஏகாதிபத்திய எதிர்ப்பு, சாதியாதிக்க எதிர்ப்பு கொண்ட ஓர் தெற்காசியப் புலம்பெயர் சமூகம் அங்கு தெளிவாகத் தெரிந்தது. புலம்பெயர் மேல்தட்டு வர்க்கத்தின் வெற்று வார்த்தைகளுக்கு பின்னால் புல்டோசரால் இடிக்கப்பட்ட வீடுகளும், சாதிய வன்முறைகளும், பறிக்கப்பட்ட நிலங்களும் அமைதியாகப் புதைக்கப்படாமல் இருக்க வேண்டுமானால், “உலகளாவிய ஒருமைப்பாடு” என்ற போலி முகமூடியைக் கிழித்தெறிவது மட்டும் போதாது. இந்த ஏகாதிபத்திய மையத்தில் கள அளவிலான நேரடி எதிர்ப்பு அரசியலையும், பகுதி பகுதியாக, நகரம் நகரமாக மக்களைத் திரட்டுவதே நமது பணியாகும்.❑

# பொய்கள் முதல் பதுங்குதல் வரை – மோகன் பகவத்தின் போலி பிம்பம் உடைந்து நொறுங்கியது

*தெற்காசிய ஒருமைப்பாட்டுக் குழு (South Asia Solidarity Group)*

ஆர்.எஸ்.எஸ்-இன் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மூன்று நாடுகளில் திட்டமிடப்பட்ட சர்வதேசப் பிரச்சாரப் பயணத்தின் இறுதிப் பகுதியான, மோகன் பகவத்தின் பிரிட்டன் பயணம், அச்சம், ரகசியம் மற்றும் குழப்பங்களால் சூழப்பட்டிருந்தது. பரந்த புலம்பெயர் அமைப்புகளின் கூட்டமைப்புகள் நடத்திய தொடர் போராட்டங்கள், சங் பரிவாரத்தின் திட்டமிட்ட பிரச்சாரச் செய்திகளைத் தவிடுபொடியாக்கியது. ஒரு காலத்தில் இந்துத்துவத்தின் கோட்டையாக பிரகடனப்படுத்தப்பட்ட புலம்பெயர் சமூகங்கள் மத்தியிலும் அவர்கள் தீவிர நெருக்கடியை எதிர்கொள்வதை வெளிப்படுத்தியது.

மேடிசன் ஸ்கொயர் கார்டனில் நடைபெற்ற ‘மதநல்லிணக்க’க் கூட்டத்தை மையமாகக் கொண்டு, பகவத்தின் அமெரிக்கப் பயணம் மிக பிரம்மாண்டமாகத் திட்டமிடப்பட்டிருந்தது; ஆனால், போராட்டங்கள், அரசியல் ரீதியிலான எதிர்ப்பு மற்றும் பிற மதத் தலைவர்களைப் பங்கேற்க வைக்க ஏற்பாட்டாளர்கள் கையாண்ட

ஏமாற்று வேலைகள் அம்பலமானதன் மூலம், அப்பட்டமாக ஒரு போலி பிம்பத்தை உருவாக்க எடுக்கப்பட்ட முயற்சி, அதன் பின்னாலுள்ள ஆர்.எஸ்.எஸ்-இன் பாசிசத் தன்மை முழுமையாகத் தோலுரிக்கப்பட்டது.

இது நிகழ்ந்து கொண்டிருக்கும் போதே, கனடாவிலும் (அவர் அடுத்து செல்லவிருந்த இடம்), பிரிட்டனிலும் உள்ள புலம்பெயர் அமைப்புகளின் கூட்டமைப்புகள், அவர் வருகைக்கு முன்னதாகவே, மக்களைத் திரட்டத் தொடங்கின.

பிரிட்டனில், 21 புலம்பெயர் அமைப்புகள் அந்நாட்டின் மத சுதந்திரம் அல்லது மத நம்பிக்கைக்கான அரசுத் தூதரகத்துக்கும், பிரிட்டன் வெளியுறவுத்துறை அலுவலகத்திற்கும் கடிதம் எழுதின. அதில் ஐரோப்பிய பாசிசத்தை மாதிரியாகக் கொண்டு உருவான ஓர் அமைப்பு ஆர்.எஸ்.எஸ் என்றும், தற்போது அது 'உலகின் மிகப்பெரிய தீவிர வலதுசாரி கட்டமைப்பின்' மையமாக உள்ளது என்றும், இந்தியாவில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், ஒடுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் பிற சிறுபான்மையினருக்கு எதிரான அதன் நீண்டகால தொடர் வன்முறைகளையும் சுட்டிக்காட்டின; மேலும் 2011-இல் நார்வேயில் நவ-நாஜி ஆண்டர்ஸ் பிரீவிக் நடத்திய படுகொலைக்கு ஆர்.எஸ்.எஸ்ஸின் தூண்டுதல், 2022-இல் லெசீஸ்டரில் அதன் புலம்பெயர் பிரிவான ஹெச்.எஸ்.எஸ் (HSS) தூண்டுதலால் நடந்த இஸ்லாமிய வெறுப்பு வன்முறை, மற்றும் உலகளாவிய அளவில் விமர்சகர்களையும், மாற்றுக் கருத்துடையோரையும் ஒடுக்கும் சர்வதேச அடக்குமுறை நடவடிக்கைகளில் ஆர்.எஸ்.எஸ் சார்ந்த புலம்பெயர் அமைப்புகளின் தொடர்பு ஆகியவற்றையும் அக்கடிதம் விரிவாக எடுத்துரைத்தது.

"பிரிட்டனில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் நிதர்சனமானவை, தீவிரமானவை மற்றும் தொடர்ச்சியானவை. மோகன் பகவத்தின் வருகை, வெறுப்புப் பேச்சுகளைப் பரப்பிட, புலம்பெயர் சமூகத்தை மேலும் பிளவுபடுத்திட, நாடு முழுவதும் உள்ள பாதிக்கப்பட்ட எளிய சமூகங்களுக்கு அச்சமூட்டிட, மிரட்டிட, அத்தகைய ஒரு சூழலை உருவாக்கிட, பிரிட்டனில் உள்ள ஆர்.எஸ்.எஸ் சார்பு அமைப்புகளுக்கு ஒரு துணிச்சலை கொடுக்கும்" என்று குறிப்பிட்ட அந்தக் கடிதம், பகவத் மற்றும் பிற ஆர்.எஸ்.எஸ் தலைவர்களுக்கு எதிராகப் புறக்கணிப்பு, கண்டனம் மற்றும் தடைகளை விதிக்குமாறு கோரியது.

"காந்தி படுகொலை முதல் 2002 குஜராத் கலவரம் வரையிலும், இன்று மோடி ஆட்சியின் கீழ் முஸ்லிம்கள் மற்றும் பிற சிறுபான்மையினருக்கு எதிராகத் திட்டமிட்டு நடத்தப்படும் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள் வரையிலும் நிகழ்ந்த, இந்து மேலாதிக்க வன்முறைகளுக்கு ஆர்.எஸ்.எஸ்-தான் பொறுப்பு. மோகன் பகவத் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் சர்வதேசப் போலி பிம்பத்தை உருவாக்கிடவும், பிரிட்டனில் உள்ள தெற்காசியர்களிடையே பதற்றத்தைத் தூண்டிவிடவும் அனுமதிக்கக் கூடாது" என்று தெற்காசிய ஒருமைப்பாட்டுக் குழு கருத்துத் தெரிவித்தது.

யுவர் பார்ட்டி (Your Party) தலைவரும் மூத்த இடதுசாரி எம்.பி.யுமான ஜெரெமி கோர்பின், பகவத்தின் லண்டன் நிகழ்வுகளைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையில், "தீவிர வலதுசாரி வன்முறையின் கொடிய வரலாற்றைக் கொண்ட ஒரு வெறுப்புக் குழுவின் தலைவருக்கு பிரிட்டன் விருந்தளித்து உபசரிக்கக் கூடாது. இது மத சுதந்திரத்தை ஒடுக்கி, சிறுபான்மையினர் மீதான பயங்கரமான தாக்குதல்களுக்குத் தூண்டுதலாக அமைந்த ஒரு தீவிர எதேச்சதிகார அமைப்பாகும். மக்களை விலக்கிவைக்கும், பாகுபாட்டை ஏற்படுத்தும் அமைப்பாகும். நமது நகரத்தில் இத்தகைய வெறுப்புக்கு இடமளிக்கக் கூடாது – மேலும் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படுவது உண்மையிலேயே அதிர்ச்சியளிக்கிறது" என்று குறிப்பிட்டார்; அதே நேரத்தில் தொழிலாளர் கட்சி எம்.பி. நதியா விட்டோம், இந்த வருகைக்கு முன்னதாக நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றையும் எழுப்பினார்.

இதற்கிடையில், லண்டன் மேயர் சாதிக் கானுக்கும் புலம்பெயர் அமைப்புகள் பல கோரிக்கைகளை முன்வைத்து கடிதம் எழுதின; அதில் இந்த வருகையுடன் லண்டன் மேயர் அலுவலகமோ அல்லது கிரேட்டர் லண்டன் அசெம்பிளியோ (GLA) எந்த தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்றும், GLA-க்குச் சொந்தமான இடங்களையோ வளாகங்களையோ இந்த நிகழ்விற்குப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என்றும் உறுதிமொழி கோரப்பட்டது.

பிரிட்டனிலும் எதிர்ப்பு வெளிப்படையாக வலுத்ததால், பகவத்தின் பிரிட்டன் சந்திப்புகள் மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டன; அவை நெருக்கமான, நம்பகமான ஆதரவாளர்களுடனான சந்திப்புகளாக மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டன; இதனால் நியூயார்க்கில் 'பொய் சொன்ன' பகவத் லண்டனில் 'பதுங்கிவிட்டார்' என்று பாசிச எதிர்ப்புப் பிரச்சாரகர்கள் சுட்டிக்காட்டினர்.

அவரது பயணத் திட்டம் இந்தியப் பத்திரிகையாளர்களுக்குக் கூட தெரிவிக்கப்படவில்லை; மேலும் அவர் எந்தவொரு செய்தியாளர் சந்திப்பையும் நடத்தவில்லை.

சங் பரிவாரிடம் இருந்து நிதி பெறுபவரும் பத்மஸ்ரீ விருதாளருமான, தீவிர வலதுசாரி இஸ்ரேல் ஆதரவு கன்சர்வேடிவ் கட்சி எம்.பி. பாப் பிளாக்மேன், பகவத் வந்தடைந்தவுடன் அவரைச் சந்தித்த இந்துத்துவ ஆதரவுத் தலைவர்கள், தொழிலதிபர்கள் அடங்கிய ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவில் இடம்பெற்றிருந்தார்.

இதன் பின்னர், செப்டம்பர் 6, ஞாயிற்றுக் கிழமையன்று பகவத்தின் முக்கிய நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; அங்கு அவர் 'சமூகத்தினரை',

அதாவது பிரிட்டன் இந்துத்துவக் கட்டமைப்பின் அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்களைச் சந்திப்பதாக இருந்தது.

அந்த இடம் ரகசியமாக வைக்கப்பட்டது; பத்திரிகையாளர்கள் கலந்துகொள்வதற்கும் தடை விதிக்கப்பட்டு, முன்கூட்டியே இடம் அறிவிக்கப்படாமல், இறுதியில் அவர்கள் ‘ஒரு தனி அறையில் அமர்ந்து ஆன்லைனில் பார்க்கலாம்’ என்று கூறப்பட்டது.

மோகன் பகவத் லண்டனின் புறநகர்ப் பகுதியான பாட்டர்ஸ் பாரில் முடங்கிப் பதுங்கியிருந்த அதே சமயத்தில், லண்டன் நகரின் மையப்பகுதியில் உள்ள நாடாளுமன்ற சதுக்கத்தில் *(Parliament Square)*, ஆர்.எஸ்.எஸ் பாசிசத்திற்கு எதிராக ஒரு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தெற்காசிய ஒருமைப்பாட்டுக் குழுவுடன் இணைந்து, பிரிட்டன் இந்திய முஸ்லிம் கவுன்சில், மனித உரிமைகளுக்கான இந்துக்கள் அமைப்பு (Hindus for Human Rights), இந்தியத் தொழிலாளர்கள் சங்கம், கேஸ்ட்வாட்ச் யூகே (Caste-Watch UK) மற்றும் பல இந்திய மற்றும் காஷ்மீரி புலம்பெயர் அமைப்புகள் இப்போராட்டத்தில் கைகோர்த்தன; இதில் பங்கேற்றவர்கள் ‘மோகன் பகவத்தே உன்னால் ஓடி ஒளிய முடியாது: ஆர்.எஸ்.எஸ் என்றால் இனப்படுகொலை’, ‘பாசிஸ்டுகள் யார்? பாஜக! ஆர்.எஸ்.எஸ்!’ போன்ற வலுவான முழக்கங்களை எழுப்பினர்; மேலும் ‘இந்திய பாசிசத்திற்கு எதிராக ஒன்றுபட்ட புலம்பெயர் சமூகம்’ என்ற பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

தெற்காசிய ஒருமைப்பாட்டுக் குழுவைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர், பகவத் கூறும் ‘உலகளாவிய ஒருமைப்பாடு’ என்ற வாதத்தின் உண்மை முகத்தை விளக்கும் போது: “இது உலகளாவிய பாசிசத்தின் ஒருமைப்பாடு; இது உலகளாவிய இஸ்லாமிய வெறுப்பின் ஒருமைப்பாடு; இது உலகளாவிய சீயோனிசத்தின் ஒருமைப்பாடு!” என்று முழங்கினார்.

‘United Against RSS’ (ஆர்.எஸ்.எஸ்-க்கு எதிராக ஒன்றுபடுவோம்) என்ற வாசகத்தின் எழுத்துக்களைத் தாங்கிய மனிதச் சங்கிலியுடன் இந்தப் போராட்டம் நிறைவடைந்தது.

அடுத்த நாள் மாலையில், பிரிட்டனில் பகவத்தின் கடைசி நாள் நிகழ்வில், மேற்கு லண்டனில் அமைந்துள்ள ஆடம்பர ‘பென்ட்லி ஹோட்டலில்’ ஆர்.எஸ்.எஸ்-இன் கோடீஸ்வர நன்கொடையாளர்களுக்கான ஒரு ரகசியக் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டார்; இந்த ஹோட்டல் சங் பரிவார் ஆதரவு பெற்ற, ‘இந்து ஃபோரம்’ (Hindu Forum) அமைப்பின் புரவலர்களான, சங்கர் குடும்பத்தினருக்குச் சொந்தமானதும், முன்னதாக சுஷ்மா சுவராஜுக்கும் தப்பியோடிய லலித் மோடிக்கும் இடையிலான ரகசிய சந்திப்பு நடந்த இடமுமாகும்.

ஆனால் பாசிச எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் அவரை இங்கும் பின்தொடர்ந்து சென்று, ‘மோகன் பகவத்தே வெட்கக்கேடு! உன் கைகளிலும் ரத்தக்கறை படிந்துள்ளது!’, ‘இன்குலாப் ஜிந்தாபாத்’ மற்றும் ‘பாசிஸ்டுகளுக்கு இங்கு இடமில்லை!’ உள்ளிட்ட தொடர் முழக்கங்களை எழுப்பி அந்தக் கூட்டத்திற்கு இடையூறு செய்தனர்.

தங்களின் வழக்கமான காலனித்துவ பாணியில், புலம்பெயர்ந்த இந்தியர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஆர்.எஸ்.எஸ், பிரிட்டிஷ் காவல்துறையை துணைக்கு அழைத்தது; இதனால் ‘மோகன் பகவத் பயப்படும் போதெல்லாம் காவல்துறையை முன்னிறுத்துகிறார்’ *(Jab Mohan Bhagwat darta hai, police ko aage karta hai)* என்ற முழக்கங்கள் அங்கே பலமாக எதிரொலித்தன. ❑



அன்புத் தோழர் பகத் சிங்

உங்கள் கருத்துகள், வார்த்தைகள், செயல்கள், என்றும் அழியாத உங்கள் தியாகம் அனைத்தின் மூலம் நீங்கள் எங்களுக்கு என்றென்றைக்கும் ஊக்கமளிக்கமளித்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது இந்தியாவில் ஒவ்வொரு இல்லத்திலும் உங்கள் வயதையொத்தவர்கள் அறியப்பட்ட பெயராகிவிட்டதைக் கண்டு நீங்கள் மகிழ்வீர்கள். நீங்கள் ‘பழுப்பு நிறக் கொள்ளையர்கள்’ என்று அழைத்தவர்களால் நடத்தப்படும் அரசாங்கம், ‘ஜென் ஷி’ என்று அழைக்கப்படும் இந்தத் தலைமுறையினரைக் கண்டு மரண பயத்தில் உள்ளது.

அரண்டு போன இந்த ஆட்சி, போராடும் இந்த இளைஞர்களுக்கு ‘திமாகி நக்சல்கள்’ என்ற புதிய பெயரை இப்போது கண்டுபிடித்துள்ளது. அவர்கள் ஒவ்வொரு அநீதிக்கும் எதிராகப் போராடும் போதும் உங்களுடைய முழக்கங்களான, ‘புரட்சி ஓங்குக’ ‘ஏகாதிபத்தியம் வீழட்டும்’ என முழங்குகிறார்கள். இன்றைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அவர்கள் ‘பாசிசம் வீழட்டும்’ என்கிற மூன்றாவது முழக்கத்தையும் சேர்த்துக் கொண்டுள்ளார்கள்.

பிறந்தநாள் வாழ்த்துகள், தோழர் பகத்!




## தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் (ஏஐகேஎஸ்) 31வது மாநில மாநாட்டில் அகில இந்திய விவசாயிகள் மகாசபை சார்பாக தோழர் சந்திரமோகன் வாழ்த்துரை

தோழர்களே!

எமது அகில இந்திய விவசாயிகள் மகாசபை AIKM சார்பில் AIKS தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 31வது மாநில மாநாட்டுக்கு புரட்சிகர வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய விவசாயத்தை ஏகாதிபத்தியம் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள் சூறையாடுவதற்கு விரைவுச் சாலை அமைத்துள்ள பாசிச பாஜக மோடி அரசுக்கு எதிரான ஒரு அரசியல் எழுச்சி உருவாகியுள்ளது. 2021ல் மோடி அரசுக்கு எதிராக டில்லியில் விவசாயிகள் துவக்கிவைத்த தாக்குதலைத் தொடர்ந்து 2026ல் மாணவர்கள் ஓங்கி அடித்து வருகின்றனர். இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க தருணத்தில் இந்த மாநாடு கூடியுள்ளது.

நாம் (AIKS-CPIM, AIKS-CPI, AIKM-CPIML) அனைவரும் கூட்டாக ஒரு போராட்ட மரபை கொண்டுள்ளோம்; பீகாரில் துவங்கிய விவசாயிகள் சங்கம், சவுக்கடி சாணிப்பால் கொடுமைகளுக்கு எதிராக, குத்தகை விவசாயிகளின் உரிமைகளுக்காக தஞ்சையில் தென்பரையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கமாக உருவானது; குறிப்பாக ஏழை குத்தகை விவசாயிகளின்... இந்திய விவசாயிகள் இயக்கத்தின்.... தெபாகா, புன்னப்புரா வயலார், தெலங்கானா விவசாயிகள் எழுச்சியின் புரட்சிகர போராட்ட வழிமரபை நாம் கொண்டிருக்கிறோம்.

AIKS தமிழ்நாட்டில் 11 இலட்சத்திற்கும் கூடுதலாக உறுப்பினர்களுடன் எழுந்து நிற்கிறது என்பது அறிந்து மகிழ்ச்சி. மீண்டும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் AIKS யை, இடதுசாரி விவசாயிகள் இயக்கத்தை வலுப்படுத்த வேண்டும், விரிவாக்க வேண்டும். இடதுசாரி விவசாயிகள் சங்கங்களை வலுப்படுத்துவது என்பது ஏற்கனவே AIKS நிகழ்ச்சி நிரலிலும் உள்ளது.

செப்.30 அமரர் பி.சீனிவாசராவ் நினைவுநாள் ஆகும். அவர், 1943ல் தென்பரையில் துவக்கிய விவசாயிகள் சங்கம், அங்கு முன்னெடுத்த மடத்து நிலத்தின் மீதான குத்தகை விவசாயிகள் போராட்டம், கோரிக்கை இன்றளவும் நீடித்து நிற்கிறது. தோழர் பி.சீனிவாசராவ் அப்போது எழுதிய “தஞ்சையில் நடப்பது என்ன?” பிரசுரம் நிலப்பிரபுக்களிடம் குவிந்துள்ள நிலவுடமைகள் பற்றிய விவரங்களை தெரிவித்தது.

தமிழ்நாட்டில் கோயில்கள், மடங்கள் மற்றும் பிற மத நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் 4.50 இலட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. அவற்றில் சாகுபடி செய்யும் குத்தகை விவசாயிகள் இன்றளவும் உரிமைகளற்று உள்ளனர், வாழ்வாதாரமற்று இருக்கின்றனர்.

கோயில்கள், மடங்கள் மற்றும் பிற சமய நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள மிகப்பெரிய நிலவுடமைகளை, அரசு கையகப்படுத்தி, அவற்றை சாகுபடி செய்யும் குத்தகை விவசாயிகளுக்கு சொந்தமாக்குவதற்கான ஒரு வலுவான போராட்ட இயக்கத்தை நாம் இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும், நில உச்சவரம்புச் சட்டம் ஏய்க்கப்பட்டுள்ளது. ஒப்புக்கானதாக உள்ளது. உச்சவரம்பு சட்டத்திற்கு மிச்சமான

இலட்சக்கணக்கான ஏக்கர் உபரி நிலங்கள், மோசடியாக பினாமி பெயரில், எஸ்டேட்களாக நிலப்பிரபுக்களின் பிடியில் உள்ளன. குறிப்பாக, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் மட்டும், பிராமணரல்லாத உயர்சாதி நிலப்பிரபுக்கள் இன்றளவும் உச்சவரம்புக்கு மிச்சமான நிலங்களை சட்டவிரோதமாக வைத்திருக்கின்ற செய்திகளை, தோழர்கள் மைதிலி சிவராமன், பி.இராமமூர்த்தி போன்றவர்கள் எழுதிச் சென்றுள்ளனர். இந்த மோசடியால் பெரிதும் வஞ்சிக்கப்பட்டவர்கள் ஏழை தலித் குத்தகை விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களே!

நமது விவசாயச் சங்கங்கள் இந்த பினாமி நிலங்கள் பற்றிய கள ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்; நில உச்சவரம்புச் சட்டத்திற்கு மிச்சமான இந்த இலட்சக்கணக்கான ஏக்கர் உபரி நிலங்களை கையகப்படுத்தி, ஏழை விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்க்கு வழங்குவதற்கான

**பரந்த இயக்கம் ஒன்றை கட்டமைக்க வேண்டும்.**

பழங்குடியின விவசாயிகளின் நிலங்களாக இருந்தாலும் பஞ்சமி நிலப் பிரச்சினையாக இருந்தாலும், அவற்றை மீட்டெடுத்து அவர்களிடம் மீண்டும் ஒப்படைப்பதற்கும் வன உரிமைச் சட்டம் 2006-ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் ஒரு வலுவான இயக்கத்தை உருவாக்க வேண்டும்.

மற்றொரு முக்கிய கடமை விவசாயிகள் இயக்கத்தை விரிவுபடுத்துவது ஆகும். பணக்கார விவசாயிகள் பற்றி நாம் விவாதிக்க வேண்டும். இன்றைக்கும் கூட சிவப்பு துண்டு, பச்சை துண்டு விவசாயச் சங்கங்கள் என்ற வேறுபாடு நிலவத்தான் செய்கிறது. மோடி அரசின் கார்ப்பரேட் ஆதரவு கொள்கையால் கடுமையாக பாதிக்கப்பட்ட பணக்கார விவசாயிகள், மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக டில்லி விவசாயிகள் போராட்டத்தில், அனைத்து தரப்பு விவசாயிகளோடு இணைந்து, பெருமளவு அணிதிரண்டதைப் பார்த்தோம். நமது விவசாயச் சங்கங்கள் எல்லாமும் முக்கிய பங்கு வகித்தன.

ஏகாதிபத்திய-பன்னாட்டு கார்ப்பரேட் கம்பெனிகளின் சுரண்டலால், பணக்கார விவசாயிகள் தங்கள் வேளாண் விளைபொருள்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமல் பெரும் நெருக்கடியில் உள்ளனர்.

பணக்கார விவசாயிகளின் செயல்பாட்டில் டில்லி விவசாயிகள் போராட்டம் ஒரு முக்கிய மாற்றத்தை குறித்தது. ஒரு பிரிவு பணக்கார விவசாயிகள், கார்ப்பரேட் எதிர்ப்புடன் கூடவே, விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரப் பிரச்சினையிலும் கரம் கோர்த்ததை டில்லி விவசாயிகள் போராட்டத்தில் பார்த்தோம்.

ஏழை விவசாயிகள், குத்தகை விவசாயிகள் மற்றும் சிறு-குறு விவசாயிகளை மையமாக அணிதிரட்டி செயல்பட்டுவரும் சிவப்பு துண்டு சங்கங்கள், தமது விவசாய சங்க அடித்தளத்தை விரிவாக்கம் செய்வது என்ற அடிப்படையில், பணக்கார விவசாயிகளின் முற்போக்கானதொரு பிரிவை, நமது சங்கத்தில் நேரடியாக அணிதிரட்டுவது பற்றி பரிசீலிக்கலாம் என்பதை உரத்த சிந்தனையாக முன்வைக்கிறேன்.

ஆனால், கிராமப் புறங்களில் அந்த இயக்கத்தின் தலைமை பாத்திரம் கிராமப்புறத்தின் கீழ்த்தட்டு விவசாயிகள், ஏழை விவசாயிகள் கையில் இருப்பது அதற்கோர் முன்னிபந்தனை ஆகும். அத்தகைய ஒரு பிரிவு பணக்கார விவசாயிகளை இயக்கத்தில் எந்தளவிற்கு இணைப்பது, எப்படி இணைத்துக் கொள்வது பற்றி எல்லாம் கூட மாநாடுகளில் விவாதிக்க வேண்டும். ❑

தூத்துக்குடியில், 28.9.26 ல் நடைபெற்ற தமிழ்நாடு விவசாய சங்கத்தின் பொது மாநாட்டில், அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் (AIKS) துணைத் தலைவர் ஹன்னன் மொல்லா, பொதுச் செயலாளர் விஜு கிருஷ்ணன், AIKS தலைவரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநிலச் செயலாளருமான பி. சண்முகம், AIKS – CPI தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி, எஸ்கேஎம் மாநில ஒருங்கிணைப்பாளர் பாலகிருஷ்ணன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் டி. ரவீந்திரன், மாநிலச் செயலாளர் சாமி நடராஜன், பொருளாளர் டி. பெருமாள் ஆகியோருடன் அகில இந்திய விவசாயிகள் மகாசபை – தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் சந்திர மோகன் கலந்து கொண்டு உரையாற்றினர்.



# இடைத் தேர்தல் பரப்புரையில் இகக(மாலெ)விடுதலை








MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted at Egmore RMS/1 Published on 1st and 16th of every month R.DIS: 2804/17

# வாக்குத் திருட்டு நடத்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரே பதவி விலகு!







Owned and **Published** by **S.Balasundaram** from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by **Chennai Offset Printers,** 19/1,21/2, KitabathKhan Bahadur street, Ellis Rd, **Chennai** - 600002. **Editor G.Ramesh**